Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 கார்த்திகை - 09 24-11-2004 புதன்கிழமை ஓசை -280


படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.
R.V பந்தல் சேவை, துர்மபுரம்.
அனைத்திற்கும் பொற்காலம் வன்னக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10599)

# போர்தான் அரசின் முடிவாக இருக்குமானால்

# பிரவச வேதனைகளை அனுபவிக்க எம்மக்கள் தயார்!

## பாராளுமன்றத்தில் சிவநேசன் பா.உ.

(அலுவலக செய்தியாளர்)



**பேச்சுவார்த்தை மூலம் எங்களுடைய உரிமையினை நாங்கள் பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். அவ்வாறான பேச்சுவார்த்தை இல்லை. போர் தான் இறுதித்தீர்வுக்கு வழிசெய்யும் என்றால் அதற்கும் எமது மக்கள் தயாராக இருக்கிறார்கள். எமது எதிர்கால சந்ததிக்காக இறுதிப்பிரவச வேதனையாக இதை அனுபவித்தாலும் அந்த வேதனையின் மத்தியில் தமிழீழம் மலரும் தமிழீழத்தின் கொடி ஐ.நா.சபையிலும் பறக்கும்.**

இவ்வாறு நேற்றுப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2005ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட விவாதத்தின் போது உரை நிகழ்த்துகையில், யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் க. சிவநேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வரவு-செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு நிதியின் அதிகரிப்பு என்பது சமாதானச் சூழலில் பாதிக்கும் போர் நடவடிக்கையாகக் கருத வேண்டியுள்ளது. இவ்வேளையில், வடக்கு-கிழக்குப் பிர (12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நினைவுப் பந்தலமைக்க மன்னாரில் படையினர் தடை

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் பகுதியில் மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்க இராணுவம் தடைவிதித்துள்ளது.

மன்னாரில் நேற்று இரவு பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட நினைவுப் பந்தலை அவ்விடத்தில் அமைக்கவிடாது இராணுவம் இடையூறு விதித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடம் மன்னார் மாவட்ட நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் முடியரசன் நடந்தவற்றை தெளிவாக கூறினார்.படையினரிடம் பேசிக்கதைத்த போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் பந்தல் அமைப்பதற் (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் பாதுகாவலர் போல் சென்ற நால்வர் பொலிசாரால் கைது

### சிறிலங்கா பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களின் பாதுகாவலர் போல் சென்றதாகக் கூறப்படும் நால்வரை ராஜகிரிய பொலிசார் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இவர்கள் இன்ரகூலர் வாகனம் ஒன்றில் பயணம் செய்தவேளை நேற்று நண்பகல் 11.30 மணியளவில் வெலிக்கடைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த வாகனமான 64-5476 இலக்கமுடைய இன்ரகூலர் வாகனத்தின் இலக்கத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சூறாவளி அச்சமில்லை

புத்தளம் பகுதியில் சூறாவளியின் தாக்கம் ஏற்படுவதாக வெளியான செய்திகளை அடுத்து கல்பிட்டிப் பகுதியில் இருந்து பெருமளவு மக்கள் வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.பா.உ.கள் இருவரிடையே பாராளுமன்றத்தில் வாக்குவாதம்

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரட்ன மற்றும் மஹிந்த சமரசிங்க ஆகியோருக்கு இடையிலேயே இந்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது அரசாங்க ஊழியர்களுக்கு 9 மணி நேர பணியினை சட்டமயப்படுத்துவது தொடர்பாக மஹிந்த சமரசிங்க கேட்ட கேள்விக்குப்பதிலளித்த அமைச்சர்சரத் (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

21.11.2004 அன்று மட்டு அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் வீதி விபத்தொன்றின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ லெப்.மலைஜெகன் (சத்திய நாதன்-இன்பராசா பருமகாமம் ஒன்று, விபுலானந்தபுரம், பெரிய போரதீவு, மட்டு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### லெப். சங்கரின் உருவப்படம் இணைப்பு

முதலாவது மாவீரர் லெப். சங்கரின் வர்ணத் திருவுருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள்

# தேசியக் கொடியேற்றலுடன் நாளை ஆரம்பம்

மாவீரர் எழுச்சி நாளுக்கான நிகழ்வுகள் நாளை காலை 8.00 மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது. பொதுச் சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரையெடுத்தல், நினைவுரைகள் என்ற ஒழுங்கில் எழுச்சி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மாவீரர் துயிலுமில்லங்களில் நாளை காலை 8.00மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் முடிவடைந்ததும் இறக்கப் படும்.


பொதுநிறுவனங்கள் பள்ளியில் 25ஆம் திகதி முதல் 27ஆம்திகதி வரை ஒவ்வொருநாளும் பணி முடிந்தபின் பிற்பகல் 12.01இற்குப் பின் 6.00மணிக்கு முன்பாக தேசியக்கொடியிறக்கப்படும்.

இதற்கான ஒழுங்குகள் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை மாவீரர் தினத்தையொட்டி தமிழர் தாயகமெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டு வருகிறது. அனைத்து இடங்களிலும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாவீரர்களின் புகழ் கூறும் பதாகைகளும், அலங்கார வளைவுகளும், கட்டப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களில் மின் அலங்காரங்கள் செய்யப்பட்டு வருவதுடன் முக்கிய நிலையங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகரம் மாவீரர் தினத்தை முன்னிட்டு மிகவும் எழுச்சிபூர்வமாக அலங்கரிக்கப் பட்டுள்ளது.

மஞ்சள் சிவப்பு நிறக்கொடிகள் கட்டப்பட்டும் சந்திகளில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டும், பதாகைகள் தொங்கவிடப்பட்டும், சகல வாகனங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் மாவீரர்களின் உருவப்படங்கள் தாங்கிய கொடிகள் பறக்கவிடப்பட்டும் உள்ளன.

முல்லை மாவட்ட கடற்புலி (12ஆம் பக்கம் பார்க்க)



நெல்லியடியில்...

## டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவு ஊழியர்கள் போராட்டம்

வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய குப்பிளான் பகுதியினில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவின் பணியாளர்கள் நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டம் ஒன்றை நேற்று நடாத்தியுள்ளனர். இவ்எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற வேளையில் பிரதான நுழைவாயில்கள் மூடிய பணியாளர்கள் உயரதிகாரிகளையும் அலுவலகத்தினுள் வைத்து மூடி சிறை வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றன.

கடந்த ஒருவருட காலத்திற்கு மேலாகப் பணியாற்றிவரும் பணியாளர்களின் ஒரு பகுதியினருக் (12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் -27

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல; நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோக தினம் அல்ல. இன்றைய நாள், ஒரு தே[illegible] எழுச்சி தினம்; எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சித் தினம்.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

### அறிவித்தல்

மூத்த,முதன்மையான மாவீரர்களது கலர் படங்கள் விற்பனைக்குண்டு ஒருதொகுதி 30/= சகல அறிவமுதிலும் பெற்றுக்கொள்ளலாம். (5304)

### தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் துஷ்யந்தன் என்பவரது 851362550V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையுடன் வன்னிப் பிரதேசத்துக்கான நிரந்தர வதிவிடப் பயண அனுமதி அட்டையும் 1ஆம் கட்டை, தம்பசிட்டி வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள். லக்ஷ்மி எலக்றிக்கல்ஸ் 1ஆம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை. என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி-10801)


# மல்லாவி நகர்ப்பகுதியில் கரும்புலிகள் சிறப்பு மண்டபம்

மல்லாவி நகர்ப் பகுதியில் 263கரும்புலி மாவீரர்களின் சிறப்பு மண்டபத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு துணுக்காய் பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த வே.தனம் தலைமையில் இடம்பெற்றது. பொதுச் சுடரினை வன்னி பாராளு மன்ற உறுப்பினர் க. கனகரத்தினம் ஏற்றியதைத் தொடர்ந்து 'தமிழீழ தேசிய கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இ.பாப்பா ஏற்றி வைக்க 263 கரும்புலிகளின் திருவுருவப்படம் வைக்கப்பட்ட சிறப்பு மண்டபத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழக முன்பள்ளிகளின் பணிப்பாளர் ரவி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மலர்வணக்கத்தை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து மலர் அஞ்சலிகள் செலுத்தப்பட்டு அகவணக்கம் என்பன இடம்பெற்றன. அரங்க நிகழ்வில் தலைமை உரையைத் தொடர்ந்து நினைவுரையை முல்லைமாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் சி.வேதவனம் நிகழ்த்தினார். நன்றியுரையை வர்த்தக சங்கச் செயலாளர் தனுராஜ் ஆற்றினார். முல்லை மாவட்டநிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் செ.புனிதன் மற்றும் போராளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச்சிறப்பு மண்டபம் இரும்புத்தொழிற்சாலை உரிமையாளர் சிவானந்தனால் நிர்மாணிக்கப்பட்டது. (24)

# மழையினால் பழுதடைந்த வீதிகள் குறித்து எச்சரிக்கை தேவை

## - காவல்துறையினர் கோரிக்கை

அண்மைக்காலங்களாக எமது பிரதேசத்தில் பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் வீதிகள் பழுதடைந்து குன்றும், குழியுமாக நீர் தேங்கி நிற்பது காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் வீதியும் நன்கு நனைந்திருப்பதால் வாகன சாரதிகளாகிய நீங்கள் உங்கள் வாகனங்களை வீதியில் மெதுவாகச் செலுத்த வேண்டும் எனவும், வீதி விபத்துக்கள் நடைபெறாத வண்ணம் வாகனங்களைச் செலுத்துமாறு அனைத்து வாகனச் சாரதிகளையும் தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## உபமருந்தாளர் பயிற்சிநெறி தொடர்பாக

நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழீழ சுகாதாரசேவையினரால் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உபமருந்தாளர் பயிற்சிநெறி மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. எனவே மறுஅறிவித்தல்வரை இவ்வகுப்புக்கள் நடைபெறமாட்டாது. என்பதனை பயிற்சிநெறியில் கலந்துகொண்டிருக்கும் பயிற்சியாளர்களுக்கு அறியத்தருகின்றனர்.

## -பாதிரியார் என்று பொய் கூறிய-

# சிறுவர்களை அழைத்துச் சென்று வேலையிலீடுபடுத்தியவர் கைது

பாதிரியார் என்று தம்மைக் கூறி நீர்கொழும்பு கட்டானையில் இருந்து மன்னார்வந்து ஏழை மாணவர்களை கல்வி கற்பிக்க அழைத்துச் சென்றவர் தற்சமயம் நீர் கொழும்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தன்னை ஓர் கிறிஸ்தவ பாதிரியார் எனக்கூறி நீர்கொழும்பு கட்டானையிலிருந்து மன்னார் வந்து மன்னாரிலுள்ள எழுத்தூர் நூறுவீட்டுத்திட்டம் கொக்குப்புளையான்,களி மோட்டைக் கிராமங்களிலுள்ள 12 வயதிற்கும் 15 வயதிற்கும்உட்பட்ட 10 சிறுவர்களை அழைத்து கட்டானையிலுள்ள தனது பண்ணையில் வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

கல்வி கற்பிப்பதாக பெற்றோரிடம் கூறி 2700 ரூபாவையும் வாங்கிவிட்டு அங்கு வேலைக்கு அமர்த்தியுள்ளார். பன்றிகளுக்கு உணவு வைத்தல், புல்லுவெட்டுதல், விறகுவெட்டுதல் பேன்ற பல வேலைகளைச் செய்து வந்ததாகவும்,சேர்ந்த சிறுவன் தனக்கு ஏற்பட்ட கடுங்காய்ச்சல் காரணமாக இரகசி யமாக தனது பெற்றோரிடம் தொலைபேசி மூலம் அறிவித்தபோதே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீர்கொழும்பு கட்டானைப் பொலிசார் குறிப்பிட்ட இடத்தை முற்றுகையிட்டு போலிப்பாதிரியாரைக் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக 10 சிறுவர்களிடமிருந்தும் இரகசியப் பொலிசார் வாக்கு மூலங்களினைப் பதிவு செய்துள்ளனர்.

நேற்று நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்டார் இதனையடுத்து இதனால் பாதிக்கப்பட்ட 10 சிறுவர்களின் பெற்றோர்களும் மன்னாரிலிருந்து நீர் கொழும்பிற்குச் சென்றுள்ளனர். (மி)

## மனநோய் சம்பந்தமான விசேட சிகிச்சை

கிளிநொச்சி நலவாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் லண்டனிலிருந்து வருகை தந்திருக்கும் மனநோய் மருத்துவ நிபுணரான சாந்தி சூரியகுமார் அவர்களினால் மனநோய் சம்பந்தப்பட்டவர்களிற்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. இதில் பயன்பெற விரும்புவோர் டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருந்துவமனை கிளிநொச்சியில் வெளிநோயாளர் பகுதியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். சிகிச்சை நாளை காலை 8.30 மணி முதல் 2.00 மணிவரை வழங்கப்படும்.

## கண்டெடுப்பு

138 ஆம் கட்டை மாங்குளம் எனும் முகவரியைச் சேர்ந்த ச.உதயகுமார் என்பவரின் உந்துருளிக்குரிய தமிழீழ மோட்டார் ஊர்தி அனுமதி ஆவணம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் கிளிநொச்சி ஏ-9 பாதையில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும் (சு)


## பன்னிரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

தாயின் மடியில் முத்தாக 1973 - 05 - 03



தாயக மண்ணின் சொத்தாக 1992 - 11 - 24

### லெப்ரினன்ட் கௌரி
### (வீரகத்தி –கௌரி)

சம்பவம்:- பலாலி கிழக்கு தொடர் காவலரண் தகர்ப்பின்போது

அந்நிய இராணுவ அழிப்பால்
ஆவரங்கால் அவலங்கண்டு
வீறு கொண்டெழுந்தாய்
வீரம்படைத்து படை வீடழித்திட- நீ
வீழ்ந்து விட வில்லையம்மா
வித்தாகிப் பன்னிரண்டாண்டுகள்
ஆழ்ந்து விட்டோம்.
உன் நினைவுகளில்

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் அஞ்சலிக்கிறோம்.

தகவல்:-
திருமதி மகவதாஸ் வளர்மதி
3ஆம் வட்டாரம்
முள்ளியவளை. (5306)

நினைவுகளில்
**குடும்பத்தினர்,**
(ஆவரங்கால்)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

அன்னை மடியில் 02 - 09 - 1953



ஆண்டவன் அடியில் 28 - 09 - 2004

அமரர் உயர்திரு

### இராசையா தியாகலிங்கம்

கடந்த 28.09.2004 அன்று இறைவனடி சேர்ந்த இராசையா தியாகலிங்கம் என்பவரின் சபிண்டீகரண வைபவம் 28.10.2004 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் தவிர்க்கமுடியாத காரணத்தால் வைபவம் நடைபெறவில்லை இவ்வைபவம் மீண்டும் 26.11.2004 அன்று எமது இல்லத்தில் நடைபெறஇருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் சமூகம் தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5302)

இல.100 டி.10,
உருத்திரபுரம் மேற்கு.

தகவல்:-
**வி, பிள்ளைகள்.**

உ
சிவமயம்
ஸ்ரீ அருளம்பல சுவாமியே நின் திருவடி போற்றி







பருத்தித்துறை வியாபாரிமூலை

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய

## புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம்

கார்த்திகை 11ஆம் திகதி 26.11.2004 வெள்ளிக்கிழமை
காலை 6 மணிக்கு கணபதி ப,ஜை,
மகா (ஷ) சங்கல்பம்
காலை 9 மணி மகா ப,ர்ணாகுதி
காலை 9.30 மணி மஹாகும்பாபிஷேகம்

ஆசியுரை :- ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் (ஆந்திரப் பிரதேசம்)
சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீ சாராதா தேவாச்சிரமம் பருத்தித்துறை)
ஸ்ரீ,சி. வாசுதேவ சர்மா (ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் வியாபாரிமூலை)

யாகசாலை நிர்மாணம், ஹோமம், மஹாகும்பாபிஷேகம் பூசைகள் தமிழ்நாடு சிவாகம வித்யா பாரதி வேதாந்த

**பி.ரி.அருணாச்சல கார்த்திகேயன்**

திருவண்ணாமலை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்

அடியார்கள் அனைவரும் அந்நேரமும் கிரியா காலங்களிலும் தவறாது வந்து கலந்துகொண்டு தொண்டுகள் புரிந்து அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

**26.11.2004 பி.ப.12.30 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்.**

சுபம்

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் அறக்கட்டளை,
யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை.

(சி-10802)



பலஸ்தீனத்திற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவல் பலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சர் நபில் சாத்தினால் வரவேற்கப் படுகிறார்.



தாக்பேய் வீகாரை ஒன்றில் தாய்லாந்து இராணுவ வீரரும் பௌத்த துறவீ ஒருவரும் உரையாடு கின்றனர்.



ஈராக்கின் மோசுல் நகரில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர்.

# பெனாசிரின் கணவர் ஜர்தாரிக்குப் பிணை

# பாக்.கூட்டணிகளில் மாற்றம் ஏற்படலாம்

-பாக்.அரசியல் வட்டாரங்கள் ஆரூடம்

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோவின் கணவர் ஆசிப் ஜர்தாரி எட்டு ஆண்டுச் சிறைவாசத்துக்குப் பின் திங்கட்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து பாகிஸ்தான் அரசியல் கட்சிகளுக்கிடையேயான கூட்டணிகளில் மாற்றம் ஏற்படலாமென பாக்.அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.**

அவரை ஜாமீனில் விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்ற பெஞ்ச் உத்தரவிட்டது. பெனாசிர் புட்டோவுக்கும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்புக்கும் இடையே சமரசம் ஏற்பட்டுவருவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில் ஜர்தாரி ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

பெனாசிர் புட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சி 1996ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து பெனாசிரின் கணவர் ஜர்தாரி, பல்வேறு ஊழல் வழக்குகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவர் ஜாமீனில் விடுதலை ஆவதை அடுத்து பாகிஸ்தான் அரசியல் கூட்டணிகளில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிணைக்கைதிகள் கொல்லப்பட்ட இடங்கள் பலூஜா நகரில் கண்டுபிடிப்பு;

(பலூஜா)

ஈராக்கில் பிணைக் கைதிகள் கொல்லப்பட்ட இடங்களை அமெரிக்கப்படையினர் கண்டு பிடித்துள்ளனர். ஈராக்கில் சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பின்பும், அங்கு தங்கியுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினரை வெளியேறக்கோரி சதாம் ஆதரவுக் கொரிலாக்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களைப் பிணைக்கைதிகளாகக் கடத்திக் கொலை செய்தது தெரிந்ததே. கொரிலாக்கள் அதிகம் உள்ள பலூஜா நகரத்தின் மீது அமெரிக்க கூட்டணிப் படைகளும், ஈராக் இராணுவத்தினரும் தாக்குதல் நடத்தி அப் பகுதிகளைத் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டு வந்துள்ளனர். இந்த நகரில் தங்கியிருந்த ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், வீடு வீடாகத் தேடும் பணியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுள்ளனர். அப்போது பிணைக் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த மற்றும் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் இடங்களை அமெரிக்க வீரர்கள் கண்டு பிடித்துள்ளனர். பிணைக் கைதிகள் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் இடங்களில் இரத்தக் கறைகள் படிந்துள்ளன. பிரிட்டன் பிணைக் கைதி கென்னத்பிக்லே அடைத்து வைக்கப்பட்டிருந்த கூண்டு போன்று நிறைய இரும்புக் கூண்டுகளையும் அமெரிக்க வீரர்கள் 20 இடங்களில் கண்டு பிடித்துள்ளனர்.



சூடானின் டார்பனில் இடம்பெயர்ந்த சிறுவனொருவன் மரநிழலில் நித்திரை கொள்வதையும், சமையல் எண்ணெய்யைப் பெற வரிசையில் நிற்கும் பெண்களையும் காணலாம். உலகிலேயே மனிதாபிமானப் பிரச்சினை அதிகமுள்ள நாடு சூடான் என ஐ.நா.சபை அறிவித்துள்ளது தெரிந்ததே.

# ஊழலை விசாரிக்க டாக்காவில் குழு அமைப்பு

(டாக்கா)

வங்கதேசத்தில் அரசில் நடைபெறும் ஊழல் குறித்து விசாரணை செய்ய புதிய ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் மூவர் இடம் பெற்றுள்ளனர். ஓய்வுபெற்ற நீதிபதி சுல்தான் ஹூசைன் கான் இதன் தலைவர். முன்னாள் ஆசிரியர் ஒருவரும் அதிகாரி ஒருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 'ஜி'-20 அமைப்பு நாடுகள் கூட்டம் அடுத்த ஆண்டு சீனாவில் நடக்கும்

(பீஜிங்)

தொழில் வளம் மிக்க பணக்கார நாடுகளும் இந்தியா போன்ற வளர்ந்துவரும் முன்னணி நாடுகளும் இடம்பெற்றுள்ள 'ஜி20' அமைப்பு நாடுகளின் கூட்டம் அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறுகிறது.

இப்போது அந்த அமைப்பின் தலைவராக இருக்கும் ஜேர்மனியிடமிருந்து சீனா அத்தலைமைப் பதவியை அடுத்த ஆண்டு பெறவுள்ளது. "உலக நாடுகளிற்கு இடையே ஒத்துழைப்பை வளர்ப்பது, சமச்சீரான, முறையான உலகப் பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வது ஆகியன குறித்து 'ஜி-20' நாடுகளின் தலைவர்கள் விவாதிப்பார்கள்" என்று சீன நிதி அமைச்சர் ஜின் ரெங்கிங் கூறினார். அடுத்த ஆண்டு மார்ச்,செப்ரெம்பர், ஜி-20 நாடுகளின் துணை அமைச்சர்கள் கூட்டமும் ஒக்ரோபர் மத்தியில் அமைச்சர்கள் நிலையிலான கூட்டமும் நடைபெறும் என்றார் அவர்.

# கையடக்கத் தொலைபேசி மூலம் பரீட்சையில் மோசடி

-தென்கொரியாவில் 140 மாணவர் கைது

(சியோல்)

தென்கொரியாவின் குவோன்யூ நகரக்கல்லூரி ஒன்றில் பரீட்சை இடம்பெற்றவேளை பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவித்து (S.M.S) எஸ்.எம்.எஸ் தகவல் பரிமாற்ற முறைமூலம் விடைகளைப்பெற்ற 140 மாணவர்கள் பொலிசாரினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தேசிய ரீதியிலான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய 6 உயர் கலைக்கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தமது கைவசம் இருந்த தொலைபேசி ஊடாக இன்ரநெற் மூலம் பரீட்சைக் கேள்விகளை அனுப்பித் தமது நண்பர்களிடமிருந்து விடைகளைப்பெற்று பரீட்சையில் மோசடி செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 140 பேரில் 40பேர்வரை தமது பரீட்சைகளைத் திறமையாகச் செய்யும் திறனைப பெற்றவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# டொலர் மதிப்பு நிலையாக இருக்க பாடுபடுவேனென்கிறார்-புஷ்

(சாண்டியாகோ)

"டொலரின் மதிப்பு நிலையாக இருக்கப் பாடுபடுவேன். அதற்காக அமெரிக்க வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக்குறையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடுவேன்" என்று அமெரிக்க அதிபர் புஷ் கூறினார்.

சாண்டியாகோ நகரில் ஆசிய பசுபிக் தலைவர்கள் கூட்டம் நடந்து வருகிறது. இந்தக்கூட்டத்திற்குப் பின் அமெரிக்க அதிபர் புஷ் மற்றும சிலி அதிபர் ரிகார்டோ லாகோஸ் ஆகியோர் கூட்டாக நிருபர்களிடம் கூறியதாவது, இன்று என்னைச் சந்தித்தவர்கள் அமெரிக்க டொலரின் மதிப்புக் குறைந்து வருவது குறித்து கவலை தெரிவித்தனர். எனது அரசு உறுதியான மற்றும் நிலையான டொலர் கொள்கைகளைக் கொண்டுள்ளது என்று அவர்களிடம் வலியுறுத்திக் கூறினேன்.

டொலரின் மதிப்புக் குறித்துக் கவலைப்படுவோர் அரசின் குறைந்த கால மற்றும் நீண்டகாலப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு முடிவெடுக்க வேண்டும். அமெரிக்க வரவு செலவுத் திட்டத்தில் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் திட்டங்கள் குறித்து அமெரிக்க காங்கிரசிடம் எடுத்துக் கூறப்படும். இவ்வாறு அதிபர் புஷ் கூறினார்.

# அரபாத் உடலில் விஷம் இல்லை பிரான்ஸ் மருத்துவமனை அறிவிப்பு

(பரிஸ்)

"அரபாத் உடலில் எந்த விஷமும் காணப்படவில்லை" என பிரான்ஸ் மருத்துவமனை தெரிவித்துள்ளது. பலஸ்தீன தலைவர் அரபாத் கடந்த 11 ஆம்திகதி பிரான்ஸ் நாட்டு இராணுவ மருத்துவமனையில் இறந்தார் இரத்தத்தில் காணப்பட்ட ஒருவகை நோயினால் அவர் இறந்தார். ஆனால் அவர் விஷம் வைத்துக் கொல்லப்பட்டதாக ஒரு தரப்பினர் சந்தேகம் கிளப்பினர் இதைத் தொடர்ந்து பிரான்ஸ் மருத்துவமனை அரபாத் இறப்புக் குறித்த அறிக்கையை அவரது மைத்துனர் நாசர் அல்-கித்வாவிடம் அளித்துள்ளது.

"அரபாத் இறக்கும் போது அவரது உடலில் எந்தவித நச்சுப் பொருளும் காணப்படவில்லை" என மருத்துவமனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக நாசர் அல்-கித்வாய் தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை பலஸ்தீன மக்களுக்கு தெரியப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. சபைக்கான பலஸ்தீன பிரதி நிதியாக நாசர் அல்- கித்வாய் உள்ளார். சிலியில் உள்ள சாண்டி கோவில் நடந்த அபெக் மாநாட்டில் அமெரிக்க அதிபா புஷ், ஜப்பான் பிரதமர் டுனிசிரோ மலேசிய பிரதமர் உட்பட பலர் கலந்து விவாதித்தனர்.



உக்ரெயின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவா ஆதரவாளர்களுடன் உணவு பரிமாறி தேர்தல் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அதே வேளை தேர்தல் மோசடியை எதிர்த்து ஒரு தரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# திருமலை, முல்லை, வவுனியா மாவட்டங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு

**தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் பிரதேச ரீதியாக இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் திருமலை, முல்லை, வவுனியா மாவட்டங்களில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.**

திருகோணமலை மாவட்டத்தில் கோட்ட ரீதியாக மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இடம் பெற்று வருகிறது.

ஞாயிறு காலை நிலாவெளி அரசியல்துறை அலுவலகத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது. தமிழீழத் தேசியக்கொடியை திருமலை மாவட்ட துணைத்தளபதி வசந்தன் ஏற்றி வைத்தார். பொது ஈகச் சுடரை திருமலை வடக்குக்கோட்ட இராணுவப் பொறுப்பாளர் குணம் ஏற்றிவைத்தார். நிகழ்வுக்கு க.தம்பி ஐயா தலைமை வகித்தார். சிறப்புரைகளை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன், மாவட்ட மாதர் சங்கங்களின் ஒன்றியத்தலைவி திருமதி. இரத்தினவடிவேல் கண்மணி ஆகியோர் நிகழ்த்தினர்.

நவம்பர் 20ஆம் திகதி வெருகலிலும், 21ஆம் திகதி இலங்கை துறைமுகத்துவாரத்திலும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இடம் பெற்றது.

மேலும் முல்லை.மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் வள்ளிபுனம்- உடையார்கட்டு ஆகிய இரண்டு வலயங்களின் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப்புமுள்ளியவளை கோட்டப் பொறுப்பாளர் தலைமையில் சிறப்பாக ஆரம்பமானது. இந் நிகழ்விற்கான தேசியக் கொடியை முல்லை.மாவட்ட காவல்துறைப் பொறுப்பாளர் ரஞ்சித் குமாரினால் ஏற்றிவைக்கப்பட்டது. மாவீரர் நினைவெழுச்சி நாள் கௌரவிப்பு நிகழ்வு உரைகளை புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கனகசுந்தரசுவாமி, முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் ஊடகப் பேச்சாளர் வேதவனம், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த வைத்தி, முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கிராமஅலுவலர் சிவராசா ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பில் பூபதிராசா உரை நிகழ்த்தினார். கடற்புலிகளின் முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமானது.

பொது ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியினை பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவின் சிறப்புத்தளபதி அஸ்வினி ஏற்றிவைத்தார். மாவீரர்கள் நினைவுரையினை அளம்பில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ் மன்னன், முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி தளபதிகளில் ஒருவரான அமுதாப், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஆகியோர் ஆற்றினார்கள்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களுடன் வந்திருந்த தளபதிகள், போராளிகள் ஆகியோர் கருத்துரைகளைப் பரிமாறினார்கள்.

இந் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், போராளிகள், தளபதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.மதிய உணவிற்கான ஒழுங்கினை முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மேற்கொண்டனர்.

வவுனியா நகர்ப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. காலை 10.40 மணிக்கு வவுனியா ஸ்ரேசன் வீதியில் குட்செட் சந்தியிலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் பாண்ட்-வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு முத்தையா கல்யாண மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடர்ந்து நிகழ்வுகளுக்கான பொதுச்சுடரினை அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை ஏற்றி வைத்தார்.மாவீரர் படத்திற்கான ஈகச் சுடரினை வவுனியா குடியிருப்புப் பிள்ளையார் ஆலய குருக்கள் கந்தசாமி ஏற்றிவைத்தார்.

## சிரமதானப்பணி

(முல்லை)

விசுவமடு மாவீரர்துயிலுமில்லத்தில் விசுமடுப்பிரதேச மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள் சிரமதானப்பணியினை கடந்த 20ஆம்திகதி மேற்கொண்டனர்.

நாள் முழுவதுமாக இப்பணி நடைபெற்றுள்ளது. (20)



கிளிநொச்சி நகரில் நேற்று முன்தினம் மாலை பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ள நீர ஏ-9 வீதியை குறுக்கறுத்து பாய்வதனையும் அதனூடாக வாகனங்கள் பயணிப்பதனையும் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# கண்ணில் புரை வளர்தல் (கற்றாக்) சத்திர சிகிச்சைக்கான முன்பதிவு

நிகொட்டின் அனுசரணையின் கீழ் கிளிநொச்சியில் கண்ணில் புரை வளர்தலுக்கான (கற்றாக்) சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக சத்திர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை இனம் காண்பதற்கான பரிசோதனையும், முன்பதிவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் நடைபெறவுள்ளன. எனவே தங்களுக்கு இந்நோய் இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பவர்களும், ஏற்கனவே சத்திரசிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களும் அன்றைய தினம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுக்கொள்கின்றார்.

# மாணவர் கொலை வழக்குவிசாரணையை துரிதப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

கல்முனை மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் பொலிசாருக்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு பள்ளிவாசலுக்கு அருகாமையில் வீசப்பட்ட தமது சக மாணவன் முகமது முபாறக் முகமதுபாசித் (வயது-15) கொலை தொடர்பான விசாரணைகளில் ஏற்படும் தாமதத்தைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், இந்த கொலைதொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் போன்றவை உட்பட சில கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில ஈடுபட்டனர்.

# தொற்று நோய்கள் ஏற்படுவதை தவிர்க்க கிணறுகளுக்கு குளோரின் இடக்கோரல்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாக நீர் நிலைகள் மாசுபட்டுள்ளதுடன் குடிநீர் மூலமாக தொற்று நோய்கள் பரவக் கூடிய ஏது நிலை தோன்றியுள்ளது.

எனவே வருமுன் காப்பு நடவடிக்கையாக கிணறுகளுக்கு குளோரின் இடுவது அவசியமென கிளிநொச்சி மாவட்டப் பிரதிமாகாண சுகாதார சேவை பணிமனையினர் வேண்டியுள்ளனர்.

எனவே சுகாதார திணைக்களத்தினருடன் தொடர்பு கொண்டு குளோரினைப் பெற்று குடிநீர்க் கிணறுகளுக்கு குளோரினை இட்டு சுகாதார நடவடிக்கைகளை கைக் கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளனர். கிணற்றிக்கு குளோரின் இடும் பொழுது கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுக.

* 4500 லீற்றர் நீரிற்கு அரை அவுன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரையான குளோரின் இடவும்.
* மிகமோசமான தொற்றுக்கு உள்ளாகியிருக்கும் நீரெனில் இரண்டு மடங்கு குளோரின் இடவும்.
* கிணற்று நீரின் அளவினைக் கணிப்பிடும் பொழுது கிணற்றின் நீரின் அளவு (லீற்றர்)= கிணற்று ஆழம் x5 விட்டத்தின் வர்க்கம்.
* ஒரு நீர் நிரப்பிய வாளியில் மேற்படி குளோரினை நன்றாகக் கரைத்த பின்னர் அந்தநீரை கிணற்று நீரில் கலந்துவிடவேண்டும்.

(சோ)



அண்மையில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மல்லாவி நகர் M.S.F வீதிகள் உடன் ஏனைய வீதிகள் கிரவல் மண் கொண்டு புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பாரஉருளைகள் கொண்டு மண்ணை இறுக்கம் அடையாமல் செப்பனிடப்பட்டது. அத்துடன் வாய்க்கால்களும் நீர் ஓடி குழாய்கள் முக்கிய இடங்களில் பொருத்தாமல் உள்ளமையால் அண்மையில் பெய்து வரும் கனமழையினால் இவ்வீதியில் பரவப்பட்ட கிரவல் மண்யாவும் அள்ளுண்டதால் நீர் தேங்கியும், வீதி குன்று குழியுமாக மக்கள் பயணிக்க முடியாத நிலையில் இருந்துவருகின்றது. (படம்–அன்ரனி)

## மின்கலத் தொகுதி வழங்கல்

(கிளிநொச்சி)

பொருண்மிய மதியுரையகத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட கல்விக்கழகத்தால் மன்னார் மாவட்ட பாடசாலைகளிற்கு சூரிய மின்கலத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளது.

மன்/கருங்கண்டல் ம.வி, மன்/அடம்பன் மத்திய ம.வி, மன்/ பெரியமடு ம.வி, மன்/ மூன்றாம் பிட்டி அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிற்கே மாலை நேர கற்றல் செயற்பாட்டிற்காக சூரிய மின்கலத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளது. (15)

# வீதிப் போக்குவரத்து தொடர்பாக பொ.மே.நிறுவனத்தில் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினரால் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி கருத்தூட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செந்தில் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தூட்டல் நிகழ்வில் வீதிப் போக்குவரத்துத் தொடர்பான கருத்துக்களை வீதிப் போக்கு வரத்துப் பிரிவுப்பொறுப்பாளர் சி.சிவகுமாரன் மற்றும் துணைப்பொறுப்பாளர் ந.ஜீவானந்தன் ஆகியோர் நிகத்தினார்கள். இந்நிகழ்வில் அந்த நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 50இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். (கு,ச)

# உணவுப் பொருட்களின் விலை துணுக்காயில் திடீர் அதிகரிப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை திடீர் உயர்வினால் மக்கள் கவலையடைந்து வருகின்றனர். மல்லாவி நகர்ப் பகுதியிலும் கிராமங்களிலும், அரிசி 1 கிலோ ரூபா 40உம் மீன் ரூபா 200 உம், மரக்கறி ரூபா80 உம், தேங்காய் 20 ரூபாவும் திடீர் என உயர்ந்ததால் அன்றாட உழைப்பை நம்பியுள்ள மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

அண்மையில் பெய்து வரும் மழையினால் தொழில்வாய்ப்பின்றி இருந்து வரும் கூலித்தொழிலாளர்கள் திடீர் விலை உயர்வினால் கவலையடைந்து வருகின்றனர். (24)

-யாழ்.,வவுனியா மாவட்ட மாவீரர் பெற்றோரை

# துயிலுமில்லங்களுக்கு அழைத்துச் செல்லும் வாகன ஒழுங்குகள் பற்றிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கிளிநொச்சி, விசுவமடு, முள்ளியவளை, அளம்பில், வன்னிவிளாங்குளம், ஆலங்குளம், முழங்காவில், ஆண்டாங்குளம், பண்டிவிரிச்சான், ஈச்சன் குளம், வடமராட்சி கிழக்கு ஆகிய துயிலும் இல்லங்களுக்கான வாகன ஒழுங்குகள் குறித்து விடுதலைப்புலிகளின் வவுனியா மற்றும் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் செய்திக்குறிப்புப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.**

யாழ்.மாவட்டத்தில் நல்லூர், நெல்லியடி, கொடிகாமம் ஆகிய மூன்று பிரதான நிலையங்களில் இருந்து மேற்குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்கு பெற்றோர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள். அதற்கு முன்னதாக குறிப்பிட்ட நிலையங்களுக்கு வந்து சேர வேண்டிய பெற்றோர்கள் அவர்களது வீட்டிற்கு அருகில் உள்ள அரசியல்துறைச் செயலகத்திலிருந்தும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அருகில் உள்ள பிரதான சந்திகளில் இருந்து குறிப்பிட்ட நிலையங்களுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

பிரதேசங்களில் இருந்து நல்லூர் நெல்லியடி, கொடிகாமம் ஆகியபிரதான நிலையங்களுக்குப் புறப்படும் வாகனம் 27 ஆம் திகதி காலை 7.00 மணி தொடக்கம் காலை 9.00 மணிவரை புறப்படும்.பிரதான நிலையங்களிலிருந்து மேற்குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்குப் புறப்படும் வாகனம் 27 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை புறப்படும். யாழ். மாவட்ட துயிலும் இல்லங்களுக்கு பெற்றோரை அழைத்துச் செல்லும் வாகன ஒழுங்கு மாவீரர் பெற்றோர்களது வீடுகளுக்கு அருகில் உள்ள அரசியல்துறை செயலகங்கள், சனசமூக நிலையங்கள் தீர்மானிக் கப்பட்ட பிரதான சந்திகள் ஆகிய வற்றில் இருந்து துயிலும் இல்லங் களுக்கு அண்டிய கௌர விப்பு மண்டபங்களுக்கு பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான வாகனங்கள் ஆரம்ப இடத்தில் இருந்து மதியம் 1.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை புறப்படும் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட மாவீரர்களின் பெற்றோர்களை அவர்களின் பிள்ளைகளின் கல்லறைகள், நடுகற்கள் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்ல வேண்டிய மாவீரர்களின் பெற்றோார்களை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்லவேண்டிய மாவீரர்களின் பெற்றோர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும் வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு வருகை தருமாறு வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (10,36)



நேற்று முன்தினம் இடம் பெற்ற வவுனியா நகர்ப்பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில்.

# இராணுவத்துடன் நெருக்கமாகப் பழகுவோர் அரியாலையில் சமூக விரோதச் செயல்களில்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதிகளில் சமீப காலமாக வீடுகளை உடைத்து கொள்ளை அடிக்கும் சம்பவங்களும் தனியாக இருக்கும் பெண்களிடம் சேட்டைகள் புரியும் சம்பவங்களும், அதிகரித்து இருப்பதாக தெரியவருகின்றது.

இப்பகுதியில் உள்ள படை முகாமில் உள்ள உளவாளிகளுடன் சிலர் நட்புறவைப் பேணி வருவதுடன் இவர்களின் ஆதரவுடன் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் இவர்களின் ஆதரவுடனேயே செயறப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இரவு வேளைகளில் வீடுகளில் அத்துமீறி நுழைந்து பெண்களிடம் சேட்டைகள் புரிவதாகவும், இச் சம்பவங்கள் இப்பகுதிகளில் பல இடங்களில் இடம்பெற்று வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க மக்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரியுள்ளனர். (28)

# தேசியத்தலைவரின் பிறந்த நாளன்று வடமராட்சியில் சிறப்பு நிகழ்வுகள்

(நமதுநிருபர்)

தமிழீழத் தேசியத்தலைவரின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு வடமராட்சியில் பல சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

தேசியத் தலைவரின் பிறந்த நாளான வரும் 26 ஆம் திகதி யாழ்.கச்சேரியில் இருந்து தேசியத் தலைவருக்கென சிறப்பு விருதினை வலிகாமம் லீக் கழக அணி வல்லை நோக்கி துவிச்சக்கரவண்டி பவனியாக தாங்கி வரும். பின்னர் வல்லையில் இருந்து வடமராட்சி லீக் கழக அணி இவ்விருதினை பேரணியாக வல்வெட்டித்துறைக்கு கொண்டு சென்று தலைவரின் இல்லத்தில் கையளிக்கும் இவ்வணியினர் சீருடையுடன் காலை 8.30 மணிக்கு வல்லை முச்சந்தியில் சந்தித்து அங்கிருந்து உரிய இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர். மற்றும் வல்வெட்டித்துறையில் மற்றொரு அணியான கொலின்ஸ் கழகம் தேசியத் தலைவரின் வீட்டில் இருந்து தங்களுடைய சிறப்பு விருதினைத் தாங்கியவாறு வதிரிக்கு வந்து அங்குள்ள வடமராட்சி கோட்டத்தில் விருதினைக் கையளிக்கும் அதே வேளை அன்றைய தினம் நெல்லியடிச் சந்தியில் இருந்து வதிரிச் சந்திவரை ஒலி,ஒளி சிறப்பாக அமைக்கப்படவுள்ளன. கடந்த மாதம் 25 ஆம் திகதி இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. அத்தோடு ஐயாயிரம் நாட்காட்டிகளும் வழங்கப்படுவதோடு வடமராட்சி அரிமா கழகத்தினரால் வறுமைக்குட்பட்ட மக்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (45)

# கட்டாக்காலி மாடுகளால் வீதி விபத்துக்கள்

(தென்மராட்சி)

கொடிகாமம் நகரப்பகுதி மற்றும் பிரதான சாலை பகுதிகளில் கட்டாக்காலி நாய்களும், மாடுகளும் வீதிகளில் திரிவதால் வீதி விபத்துக்கள் நிகழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாடுகள் வீதிகளில் கூட்டம் கூட்டமாய் நிற்பதால் வாகனங்கள் செல்வதில் இடையூறுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# பழுதடைந்த மின் விளக்கை திருத்த மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

கொடிகாமம் பேருந்து நிலையத்திற்கு முன்னால் பொருத்தப்பட்ட மின்விளக்கு கடந்த ஒரு வார காலமாக பழுதடைந்து ஒளிராமல் இருப்பதால் இதனை உடனடியாக மாற்றி புதிய மின்விளக்கைப் பொருத்தும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மாலை நேரங்களில் இப்பகுதி மின் விளக்கு இன்மையால் இருளடைந்து இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட மின சார சபைக்கு இதனைத் தெரியப் படுத்தியும் இதுவரை இவ்விளக்கு மாற்றப்படவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (28)



வவுனியா நகர்ப் பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை தேசியக் கொடியை ஏற்றுகிறார்.

# தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையை திறப்பது இவ்வருட இறுதியிலும் சாத்தியமாகாதாம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையினை இவ்வாண்டின் இறுதியினுள் திறக்கும் முயற்சி மீண்டும் தாமதமாகலாமெனக் கூறப்படுகின்றது. தற்போது இடம்பெற்று வரும் வைத்திய சாலைக்கட்டட திருத்தப்பணிகள் பெரும்பாலும் அடுத்த ஆண்டில் மார்ச் மாதமளவிலேயே முடிவடையலாமென எதிர்பார்க்கப்படுவதாலேயே மீளத்திறக்கும் முயற்சிகள் தாமதமடைவதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1990ஆம் ஆண்டு முதல் படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையினை மீளத்திறக்க மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளும் இறுதியில் தோல்வியினிலேயே முடிவுற்றிருந்தது. இந்நிலையத்தினை மீளத்திறந்து வைப்பதில் போதிய ஒத்துழைப்பினை வழங்குவதாக முன்னைய யாழ்.படைத்தலைமை உறுதி அளித்திருந்த போதிலும் அவர்களது கெடுபிடிகளால் தற்காலிகமாக சொந்த இடத்தில் குறித்த சிகிச்சை நிலையத்தினை இயங்கவைக்க மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெற்றிருக்கவில்லை. சிகிச்சை நிலையத்தின் திருத்தப்பணிக்கென வருகை தரும் பணியாளர்கள் மீது தெல்லிப்பழை இராணுவச் சோதனைச்சாவடியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கெடுபிடிகளாலேயே வைத்தியநிலையப் பணிகள் முடக்கிப் போயிருந்தது. எனினும் மீள இச்சேவைகளை ஆரம்பிக்க முழுஅளவில் உதவிகளை வழங்க. இருப்பதாக தற்போதைய யாழ்மாவட்ட படைகளின் கட்டளைத தளபதி அறிவித்துள்ள நிலையில் திருத்தப்பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (22)

# கரணவாய், பருத்தித்துறையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(வடமராட்சி)

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. 37 மாவீரர்களின் பெற்றோர்கள் இதில் கலந்து கொண்டனர். இந் நிகழ்வானது தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரும் மாவீரரின் தந்தையுமான கணபதிப்பிள்ளை வரவேற்புரையினையும் வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொருளாளர் செபஸ்ரியான் மற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாகர் ஆகியோர் சிறப்புரையினையும் நிகழ்த்தினர்.

பருத்தித்துறை வடபிராந்திய போ.வ.சபையின் தொழிற்சங்க ஊழியர்கள் தமது தொழிற்சங்கத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை வ்.பி.போ சபை ஒன்று கூடல் மண்டபத்தில் தொழிற்சங்க ஊழியர்களின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ அரசறிவியலாளர் கல்லூரி அதிபர் சு.அரசண்ணாகலந்து மாவீரர்களின் தியாகம் இவர்களைப் பெற்றெடுத்த பெற் றோர்கள் கௌரப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதனைத் தனது சிறப்புரையில் எடுத்துக் கூறினார்.


# மணற்காட்டுக் கடற்கரையில் இனந் தெரியாத பொருள்

யாழ். வடமராட்சி கிழக்கு மணற்காட்டுக் கடற்கரையில் சுமார் 5 அடி விட்டமுள்ள கோளவடிவமான இனந்தெரியாத ஒன்று நேற்று காலைகரை ஒதுங்கியது.

இது குறித்து அப்பகுதி மீனவர்கள் கடற்படையினரிடம் தெரிவித்ததையடுத்து அங்கு வந்த கடற்படையின் வெடி பொருள் அகற்றும் பிரிவினர் அதனை மீட்டெடுத்து வெடிகுண்டுச் சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளனர். இதில் சில ஆங்கில எழுத்துகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. (33)

# பா.ஜ.க கொள்கையில் தடுமாற்றம் எதுவரை...?

இந்திய அரசியலில் பாரதிய ஜனதாக்கட்சியும் இந்துத்துவாக் கொள்கையும்" ஈருடல் ஓருயிர்" போன்றே இதுவரை காலமும் இணைபிரியாது இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இன்றோ இந்துத்துவா கொள்கையையே தூக்கிவீசி விட்டதாக அக்கட்சி


அத்வானி

அறிவிப்பு செய்திருப்பதை பார்த்தால் இது உண்மையா........ பொய்யா எனும் சந்தேகம் தான் நர்த்தனமாடுகின்றது.ஏனெனில் பாரதிய ஜனதாவிலிருந்து இந்துத்துவாவை மிக இலகுவில் பிரித்து விடுவதென்பதோ.....இந்துத்துவாவை அக்கட்சி கைவிட்டுவிடுவது என்பதோ அக்கட்சியைப் பொறுத்தவரை மிகச்சாதாரண விடய மல்ல.

ஆனால் இன்றோ அக்கட்சி இந்துத்துவா கொள்கையையும் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதையும் விட்டுவிடுவதாக அறிவிப்பு செய்திருப்பதை பார்க்கும் போது அக்கட்சிக்கு கொள்கைத் தடுமாற்றம் ஏற்பட்டு விட்டதா....என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மறுபுறமாகப் பார்க்கும் போது அக்கட்சி இவ்வாறு அறிவிப்பு செய்வது வழமை என்பதும் மீண்டும் "பழைய குருடி கதவைத் திறவடி'' என்பது போன்று இந்துத்துவாவே எமது கொள்கையின் அடிநாதம் என்று முழங்குவதும் சாதாரண விடயம் தான்!


ஏனெனில் பாரதிய ஜனதாவின் தேசிய சனநாயக கூட்டணி எதிர்க்கட்சி வரிசைக்குத் தள்ளப்பட்டு ஐந்து மாதங்கள் பூர்த்தியாகியிருக்கும் நிலையில் அக்கட்சி இரண்டாவது தடவையாக இந்துத்துவா கொள்கை கைவிடல் குறித்து அறிவிப்புச் செய்திருப்பதை கவனிக்க முடியும்.

இந்தக் கொள்கை கைவிடல் அறிவிப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் எனும் சந்தேக அலைதான் இப்பொழுது நிலவுகின்றது. ஏனெனில் கூட்டணிக்கட்சிகளின் வற்புறுத்தலுக்காகவே அக்கட்சி இந்த அறிவிப்புச் செய்திருப்பதை நன்குணரவும் முடிகிறது.

இதிலிருந்து வெளிப்படும் உண்மை ஒன்று இருக்கின்றது. பாரதிய ஜனதாக்கட்சியைப் பொறுத்தவரை கூட்டணிக் கட்சிகளைப் பிரியவிடாது தடுத்தே தீர வேண்டும. இல்லையேல் அக்கட்சி சிதறி சின்னாபின்னமாகி இருந்த இடம் தெரியாமல் போய்விடும் அபாயம் தான் அதிகம் என்பதை அக்கட்சி நன்குணர்ந்துள்ளதால் தான் இந்த அறிவிப்பு.

இல்லையேல் அக்கட்சி இவ்வாறு கொள்கை கைவிடல் அறிவிப்புச் செய்வதற்குமே சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. பாரதிய ஜனதாக்கட்சியின் வளர்ச்சிப்பாதை நோக்கிய வரலாற்றில் சற்றுப் பின்னே நகர்ந்தால் இந்த உண்மை தெளிவாகும்.

1984இன் முன்னர் பாரதிய ஜனதாக்கட்சி அவ்வளவாக சோபித்ததில்லை. இரண்டே இரண்டு லோக்சபா ஆசனங்களுடன் இருந்த கட்சி 1991 இல் 110 இடங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றியது என்றால் அதற்கு



முக்கியமானதும் முதலாவதுமான காரணம் அக்கட்சி இந்துத்துவாக் கொள்கையினை முதன் முதல் கையில் எடுத்தமையின்றி வேறில்லை.

அத்துடன் இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அத்வானியை உலகறிந்ததும் இந்துத்துவாக் கொள்கையினால் தான்! அயோத்தியில் இராமருக்கு ஆலயம் கட்டியே தீருவோம் எனும் சூழுரையுடன் அத்வானி தொடக்கி வைத்த ரதயாத்திரைதான் 1992 டிசம்பர் ஆறில் பாபர் மசூதி மண்மேடாகக் காரணமாயிற்று.

அயோத்தியும் இந்துத்துவாக் கொள்கையினாலும் அன்று உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி அதன் பின்னர் துணைப்பிரதமராகியதும் யாரும் அறிந்த விடயமே.

அது மட்டுமன்றி பாரதிய ஜனதாவின் இதே இந்துத்துவா கொள்கைதான் மாநிலங்களில் வகுப்புவாத வன்முறை கலவரங்களையும் உருவாக்கியது. அதிலும் குஜராத் மாநிலமே இந்துத்துவா என்னும் பாரதிய ஜனதாவின் கொள்ளையினால் தீக்கிரையாகிப் போனது.

மிக உக்கிரமாக 2002இல் மதக்கலவரமே வெடித்து 600 இற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

எனவே பாரதிய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை இந்துத்துவா கொள்கைதான் ஆட்சியில் அமர வலுவான ஆதாரம். இதனை அக்கட்சியே ஒ[illegible]ண்டும் இருக்கின்றது.

கடந்த மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பிரதான காரணம் இந்துத்துவா கொள்கையைப் பின் பற்றாமையே. எந்தப் பாதையால் பயணித்தாலும் இறுதியில் இந்துத்துவாவைப் போய்ச்சேர்ந்திருந்தால் வெற்றி கிட்டியிருக்கும் என்பதே அக்கட்சி வலுவாக என்றும் நம்புகின்றது.

அதனால் தான் எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றவுடன் எல்.கே.அத்வானி கூறிய முதல் வார்த்தை ''இந்துத்துவாப் பாதைக்கு மீண்டும் திரும்பி விடுவோம்" என்பதுதான்!

அது மட்டுமன்றி அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டியே தீரவேண்டும் என்றும் அவர் சூழுரைத்திருந்தார்.

இதனைக கூட்டணிக்கட்சிகள் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. கூட்டணியில் இருந்து வெளியேறி விடப்போவதாகக் கூட ஜோர்ஜ் பெர்ணான்டர்ஸின் கட்சி அறிக்கை வெளியிட்டது.

ஏற்கனவே இந்துத்துவாக் கொள்கையினால் தான் கடந்த மக்களவைத் தேர்தலில் முன்பிருந்தக் கூட்டணிக்கட்சிகள் வெளியேறி காங்கிரஸ்சுடன் இணைந்து கொண்ட நிலையும் இருக்கின்றது.

அதனால் தான் கூட்டணிக் கட்சிகளுக்காகவேதான் பாரதிய ஜனதா இந்துத்துவா கொள்கையினை கைவிட்டுள்ளதாக அறிவித்திருக்கின்றது. அவ்வாறு தான் பாரதிய ஜனதாவும் கூறியுள்ளது.

ஆனால் உண்மை நிலை வேறொன்று என்பதை ஆழ்ந்து கவனித்தால் புரிந்துவிடும். காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரின் கைதையடுத்தே தான் பாரதிய ஜனதா இவ்வாறான கொள்கை குறித்து அறிவிப்புச் செய்தது.

ஏனெனில் காஞ்சி சங்கராச்சாரியாரும், பாரதிய ஜனதாக் கட்சியினரும் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது உலகறிந்த விடயம்.

அது மட்டுமின்றி இதே சங்கராச்சாரியார்தான் அயோத்திப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமரசத் திட்டமொன்றை கடந்த வருடம் முன் வைத்துப் பரபரப்பைக் கூட ஏற்படுத்தியவர்.

அந்த சமரசத் திட்டத்தை பாரதிய ஜனதாக் கட்சியும் அப்போது ஆதரித்தமையும்; முஸ்லிம் வாரியம் எதிர்த்தமையும் கூடக் கடந்த காலத்தில் நடந்தவை. இவற்றை விட இப்போது சங்கராச்சாரியாரின் கைது பல விடயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன. உண்மையில் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் ஆலய அதிகாரி சங்கரராமன் படுகொலை செய்யப் பட்டதுடன் சங்கராச்சாரியாருக்குத் தொடர்புண்டு என்ற வகையில் தான் அவர் கைது செய்யப்பட்டதாக தமிழக பொலிசார் கூறியுள்ளனர்.

ஆனால் இப்பொழுதோ கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக, வாஜ்பாய் அரசு காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்துமத மட ஆலயங்களுக்கு நிதியினைப் பெறும் வழிகள் யாவும் எளிதாக்கிக் கொடுக்கப் பட்டதாகப் புதிய தகவல் வெளி வந்துள்ளது.

அதிலும் குறிப்பாக காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேயந்திரரின் மடத்திற்கே கூடுதலான வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், குறிப்பாக வெளி நாட்டில் வாழும் இந்தியர்களிடமிருந்து சுமார் ஆயிரம் கோடி ரூபாய்களை காஞ்சி சங்கராச்சாரியார் மடம் பெற்றுக்கொள்வதற்கு முன்னாள் வாஜ்பாய் அரசு வழி அமைத்துக் கொடுத்ததாக புதிய குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டிய நிலையில் எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக்கட்சி இருக்கின்றது. இந்த வேளையில் கூட்டணிக் கட்சிகளுடன் முரண்பட்டுக்கொள்ள விரும்பாமலேயே பாரதியஜனதா இவ்வாறு இந்துத்துவாக் கொள்கையை கைவிட்டுள்ளதாகக் கூறி கூட்டணிக் கட்சிகளைக் சமாதானப்படுத்தியுள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி இந்த அறிவிப்பை செய்யவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

வாஜ்பாய் தலைமையில் கூடிய கூட்டத்திலேயே இந் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. நிச்சயம் அத்வானி இந்த அறிவிப்பை விரும்பியிருக்க மாட்டார். என்பதையும் நம்ப முடியும்.

இதேவேளை பாரதிய ஜனதாக் கட்சிக்கு இந்தகைய புதிய சிக்கலை உருவாக்கியிருப்பது தமிழக அரசுதான் என்பது வேடிக்கைக் குரியதொன்று.

என்றாலும் வாஜ்பாய் தலைமையிலேயே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளதால் இது எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்பது கேள்விக்குறியே?

ஏனெனில் ஏற்கனவே மிதவாதியான வாஜ்பாயை புறந்தள்ளித்தான் அத்வானியும், வெங்கையாநாயுடுவும் இந்துத்துவக் கொள்கையே தம்மை மீண்டும் ஆட்சியில் அமர்த்தும் என்று முழங்கியவர்கள்.

அது மட்டுமன்றி அயோத்தி இடிப்பு வழக்கில் டில்லி நீதிமன்றம் மீண்டும் அத்வானி, உள்ளிட்டவர்களிடம் மீண்டும் விசாரணை நடத்த முடிவு செய்திருக்கின்றது. இத்தகைய நடவடிக்கையினை அத்வானி உள்ளிட்டவர்கள் விரும்பப் போவதில்லை. அதிலிருந்து விடுபடவும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், தமது சுய


வாஜ்பாய்

நலத்திற்காகவும் இந்துத்துவாக் கொள்கைக்குத் திரும்பாமல் இருக்கப்போவதில்லை.

அதுமட்டுமன்றி அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டும் வரை ஓயப்போவதில்லை. எனும் முழக்கமும் எதிரொலிக்கத் தவறப் போவதில்லை.

ஏனெனில் அயோத்தியும் இந்துத்துவாவும் தான் பாரதி ஜனதாக் கட்சியை ஆறாண்டு காலம் ஆட்சியில் இருத்தியிருக்கின்றது என்பதை அக்கட்சியும் தவிர்க்க முடியாது.

எனவே இந்துத்துவாவையும், அயோத்தியையும் பாரதிய ஜனதா கைவிட்டு விட்டது என்பது வெறும் மாயை என்றே கூற வேண்டும். குறிப்பாக சங்கராச்சாரியாரால் தோன்றியுள்ள சிக்கல்களில் இருந்து விடுபடவும், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வரையும் அயோத்தியும் இந்துத்துவாவும் கைவிடப்பட்டதாகவே

**அ. கலைவாணி**

இருக்கும். அது மீண்டும் தலையெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை எனலாம்.

ஏனெனில் இந்துத்துவாவும், அயோத்தியுமே பாரதிய ஜனதாவின் இரண்டு கண்கள் என்று வர்ணிக்கப்படும் நிலையில், தற்காலிகமாகவே இந்தக் கொள்கை கைவிடல் என்றால் அது மிகையில்லை.


மறுபுறம் பாரதிய ஜனதா இந்துத்துவா கொள்கையினை கைவிட்டுவிட்டதென்றால் ஏன் தமது புதிய கொள்கையினை வெளியிடவில்லை என்பதும் கேள்விக்குரியதொன்றே.

இந்த வகையில் பாரதிய ஜனதா தனது இந்துத்துவாக் கொள்கையினை சிறிது காலம் மட்டுமே விட்டுவிட்டதாக கூறும். மீண்டும் இந்துத்துவாவே தமது பாதை என்று கூறும் நாளும் வரும். அந்த நாள் எப்போது?

15.

*அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சி பிரச்சினை இல்லை. மக்கள் விடுதலை முன்னணியே பிரச்சினை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தமது கட்சிக்கு புதிய உறுப்பினர் களை இணைத்துக்கொள்ளும் பணி ஆரம்பிக்கப்பட்ட வேளை தெரிவித்தார்.

*வன்னிப் பிரதேசத்தில் மீட்புநிதிக் கடன் மீளளிப்பு இடம் பெற்றது.



மீட்பு நிதிகடன் மீளளிப்பு...

*திருமலை இராணுவக் கட்டளை அதிகாரியுடன் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

*"வர்ணங்கள் கரைந்த வெளி" நூல் வெளியீட்டு விழா கிளி/பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.




நூல் வெளியீட்டு விழா...

*கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் வெள்ளம் நிரம்பிய குழிகளில் வீழ்ந்து இரு குழந்தைகள் மரணம்.

16

*அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தார்.



பாராளுமன்ற உறுப்பினர்களுடன்..

*பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் படாமைக்கு அடிப்படைக்காரணம் அரசாங்கமே என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கிளிநொச்சியில் இடம் பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.


*விடுதலைப்புலிகள் சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக தமது இறுதி நிலைப்பாட்டை இம்மாத இறுதிக்குள் அறிவிக்கவேண்டுமென சனாதிபதி சுயாதீன தொலைக்காட்சிக்குப் பேட்டி.

*அநுராதபுரத்திலிருந்து யாழ்.நோக்கி வந்த வான் மீது படையினர் சுட்டதில் கோண்டாவில் வாசி பலி.

*இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மட்டக்களப்பில் குடும்பஸ்தர் ஒருவர் பலி.

17

*தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வனை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் ஹொவ்டே சந்தித்தார்.



ஹொவ்டேயுடன் சந்திப்பு...

*தமிழீழத் தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தலைவருக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும், யாழ்.மத்திய கல்லூரி சமூகத்தினரும் வாழ்த்துச் செய்தி அடங்கிய கேடயங்களை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனிடம் கையளித்தனர்.



வாழ்த்துச் செய்தி கையளிப்பில்...

*கூட்டுப்படைத் தலைமை அதிகாரி தயாசந்தகிரி யாழ்.விஜயம்.

18

*அரசின் வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

*இராணுவ புலனாய்வாளர்கள் இருவர் பொலநறுவையில் சுட்டுக்கொலை.

*ஆரையம்பதியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது கைக் குண்டு வீச்சு.

*பிரான்ஸ் தூதரக அதிகாரிகள் யாழ். விஜயம்.

19

*வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது உந்துருளியில் வந்தோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி, ஒருவருக்குக் காயம்.




*வல்வெட்டித்துறையில் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்களின் கொலையை வன்மையாகக் கண்டிப்பதாக யாழ். அரசியல்துறையினர் அறிக்கை வெளியிட்டனர்.

*கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய சுட்டுக்கொலை.

*சனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பேட்டியில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகங்களுக்கு அறிக்கை மூலம் தெரிவிப்பு.

20

*வல்வெட்டித்துறையில் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையைக் கண்டித்து யாழ்.குடாநாடு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.



குடா நாட்டில் ஹர்த்தால்...

*புலிகளின் குரல் வானொலியின் 14 ஆம் ஆண்டு நிறைவுவிழா புலிகளின் குரல் வானொலியின் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.




14-ஆவது ஆண்டு நிறைவில்...

*மூதூர் பகுதியில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இளைஞர் ஒருவர் பலி.

*அரசும்-புலிகளும் கேட்டுக்கொண்டமைக்கு இணங்கவே ஏற்பாட்டாளராக நோர்வே பங்காற்றுகிறதென இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் அம்பாந்தோட்டையில் இடம் பெற்ற ஊடக மாநாட்டில் தெரிவிப்பு.

21

*மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக ஆரம்பம்.



ஆரம்ப நிகழ்வில்...

*வல்வெட்டித்துறையில் உந்துருளியில் வந்தவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலியான இளைஞர்களின் இறுதிக்கிரியைகள் இடம் பெற்றன.

*ஹைஏஸ் வாகனம் அம்பாறையில் ஆற்றில் பாய்ந்ததில் ஏழு பேர் பலி.

*விடுதலைப்புலிகள் அலுவலகம் மீதான தாக்குதலுக்கு சிறிலங்காப் படையினரே பொறுப்பேற்க வேண்டுமென மட்டு-அம்பாறை அரசியல்துறையினர் தெரிவிப்பு.

# அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் கடந்த 3 மாதங்களில் 11,319 பேர் சிகிச்சை

(கிளிநொச்சி)

அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களில் 11,319 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் ஒக்ரோபர் மாதம் 4207 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். காய்ச்சல் காரணமாக 680பேரும், மலேரியாக்காய்ச்சலிற்கு 192 பேரும், கிருமித்தொற்று நோய்களிற்கு 124 பேரும், நாய்க்கடிக்கான சிகிச்சையிற்கு 12 பேரும், விபத்துக்காயங்களிற்கான சிகிச்சையினை 536 பேரம், டயரியாவிற்கு 5 வயதிற்கு உட்பட்டோர் 54 பேரும், 5 வயதிற்கு மேற்பட்டோர் 55 பேரும் சிகிச்சைப் பெற்றுள்ளனர். இதேவேளை ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களை விட ஒக்ரோபர் மாதத்தில் கூடுதலான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். மலேரியா,வாந்திபேதி, காய்ச்சல் போன்ற நோய்களிற்கும் ஒக்ரோபர் மாதத்தில் கூடுதலானோர் சிகிச்சையினைப் பெற்றுள்ளமை வைத்தியசாலைப் புள்ளிவிபரத்தில் இருந்து தெரியவருகிறது.

(15,07)

# நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழுங்க நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் கரைச்சிபிரதேச காணி உரிமையாளர்களுடைய தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரங்களாக மாற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் அனுமதிப் பத்திரமற்ற காணி உரிமையாளர்களுக்குத் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

இந்த வகையில் கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் 331 காணி உரிமையாளர்களின் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் நிரந்தர அனுமதிப் பத்திரங்களாக மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கைகளும் அதேபோன்று விநாயகபுரம கிராமத்தில் 36 காணி உரிமையாளர்களது தற்காலிக அனுமதிப்பத்திரங்களும், ஊற்றுப்புலம் கிராமத்தில் 60 காணிஉரிமையாளர்களது தற்காலிக அனுமதிப்பத்திரங்களும், நிரந்தர அனுமதிப் பத்திரங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.சு)

# களவாக மின்சாரத்தை பெற்றவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

மின்சாரத்தை களவாகப் பெறுபவர்களிற்கு எதிராக வட்டக்கச்சியில் குற்றப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது.

வட்டக்கச்சியில் நறுமை மின் வழங்கல் சேவையினரால் தினமும் 5மணி நேரம் மின் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இங்கு வழங்கப்படும் மின் இணைப்பில் இருந்து இரகசியமாக மின்னினை பெறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 5000 ரூபா குற்றப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

இதே போன்ற செயற்பாட்டில் ஈடுபடுவோர் மீது தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (15)

# நான்காயிரம் பனம் விதைகள் நடுகை

தேசிய மரநடுகை தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் சாந்தபுரம் பகுதியில் நான்காயிரம் பனம் விதைகள் கடந்த 18 ஆம் திகதி நடுகை செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் மதியுரையகத் திட்ட இணைப்பாளர் டாக்டர் மனோகரன், பத்திரிகையாளர் எரிக் மற்றும் மன்னார் மாவட்ட மதியுரையக நிறுவனத்தின் இணைப்பாளர் கி.பிரபாகரன் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் விஜேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கருத்துரைகள் சிறப்புரைகளை தொடர்ந்து சாந்தபுர பாடசாலை வளவில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டதுடன் கிராம மக்கள் அனைவருக்கும் நடுவதற்காக பனம்விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# நேர்முகத் தேர்வு கடிதம் பெறவும்

நிரந்தர விலாசம் சரியாக குறிப்பிடப்படாததன் காரணமாக எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த பரீட்சையில் சித்தி எய்திய விண்ணப்பதாரியான ஆர்.கார்த்திகேசன் என்பவருடைய நேர்முகத்தேர்வுக்கான கடிதம் உரியவரிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் கிளிநொச்சி, கரைசசிப் பிரதேசசெயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனவே சம்பந்தப்பட்டவர் உடனடியாக கரைச்சிப் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு நேர்முகத் தேர்வுக்கான கடிதத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ.சு)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த மரணதண்டனை பயன்தராது

## - விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு

நாட்டில் மரண தண்டனை அமுல்செய்யப்பட்டமையின் மூலம் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியும் என்ற அரசாங்கத்தின் எண்ணம் பிழையானது என புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். .இன்று நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமைக்கு பிரதான காரணம் கடந்த 20 வருட கால யுத்தமாகும், .இந்த யுத்தத்தின் பின்விளைவே இன்று குற்றச்செயல்களுக்கு காரணமாக அமைந்துள்ளது. படையிலிருந்து தப்பி வந்த பலர் வேறு மார்க்கமின்றி குற்றச் செயல்களில் ஈடுபடவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் நாட்டில் மேலும் குற்றச்செயல்கள் அதிகரிப்பதை தடுக்க அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (32)

# ௭மணிநேர வேலையை வற்புறுத்தின் போராட்டம் என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

அரசாங்கம் அரசாங்க சேவையாளர்களின் பணி நேரத்தை 9 மணித்தியாலங்களாக அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளக்கூடாது என அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும், சிறுகைத் தொழில்துறை அமைச்சருமான லால்காந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நிதி அமைச்சர் சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் விளக்கமளிக்கவேண்டும் என்றும் அவர் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். இதனை மறுத்து அரசாங்கம் தொடர்ந்தும் 9 மணித்தியாலங் களாக பணியாற்றுமாறு அரசாங்க ஊழியர்களை வலியுறுத்துமானால் அதற்கு எதிராக தமது கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.(32)

# வரவு-செலவுத்திட்டம் மூலம் தேர்தல் வாக்குறுதிநிறைவேற்றவில்லை!

## -தபால் தொடர்புகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முடியவில்லை என்பதை தபால் தொடர்புகள் அமைச்சர் டீ.எம். ஜெயரட்ண ஒப்புக் கொண்டுள்ளார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், தேர்தல் காலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு எழுபது சதவீத சம்பள உயர்வு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியிருந்தது.

ஆனால் அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்த தமது அரசால் முடியவில்லை எனவும். இதேவேளை நாடு சுதந்திரமடைந்ததுமுதல் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் எதுவுமே இதுவரை தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனவும், அதேபோன்றே தமது அரசாங்கத்தாலும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை தேர்தல் வாக்குறுதிகள் ஒரு சம்பிரதாய பூர்வமாகவே தற்போது கொடுக்கப்படுவதாகவும், பாதுகாப்பு நிதிக் காக ஏழாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு நிதியை மீதப்படுத்த வேண்டுமாக இருந்ததில் எதிர்க் கட்சித் தலைவரான ரணில் விக்கிரம சிங்க சனாதிபதியுடன் இணைந்து சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டுமே அதனை மீதப்படுத்த முடியும் எனவும், நாட்டில் சமாதானம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் தான் அரசாங்கங்கள் கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் எனவும், யதார்த்த பூர்வமான வாக்குறுதிகளைக் கொடுப்பதன் மூலமாகத்தான் மக்கள் மனதில் நிரந்தரமாக இடம்பிடிக்க முடியும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அரசியல் வேறுபாடுகளின்றி சனாதிபதி நடந்துகொள்வாரா?

## – முன்னாள் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய

(கொழும்பு)

சிறிலங்காவில் கொலை, பாலியல்வன்முறை, போதைப்பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்ற தீர்மானத்திற்கு பெரும்பாலானவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி சிறிலங்காவின் முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபரான கொட்டகதெனிய தெரிவித்துள்ள கருத்தில் இந்த மணர தண்டனை அமுல்படுத்தும் போது சனாதிபதி அரசியல் வேறுபாடுகளைத் தவிர்த்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் குறிப்பிடுகையில், தான் பதவியில் இருக்கும்போது இந்த தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துமாறு அப்போதைய பொலிஸ்மா அதிபரான லக்கி கொடித்துவக்குவை கேட்டபோது அவர் தன்னைக் கடிந்து கொண்டதாகத் தெரிவித்தார். அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலம் சிறு குழுக்களாகச் சேர்ந்து புரியும் பல குற்றச்செயல்களை கட்டுப்படுத்த முடியுமென நினைப்பதாகவும், எனினும் இந்த விடயத்தில் சந்திரிகாவே இறுதி முடிவு எடுக்க வேண்டியவா என்பதால் அவர் அரசியல வேறுபாடுகள் இன்றி நடந்து கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர் கருத்துக்கூற எவ்வித வரையறைகளும் இல்லை

## – சபாநாயகர் அறிவிப்பு

அரசியல் யாப்பை மீறும் வகையில் கருத்துக்களைத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டமூடாகவே நடவடிக்கைகளை எடுக்க முடியுமெனவும் அரசியல் யாப்பை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சட்டமா அதிபரிடமே இருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆற்றிய உரைகள் அரசியல் யாப்பிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகவும், அரசியல் யாப்பை மீறுவதாகவும் அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.அமரசிங்க ஆகியோர் பாராளுமன்றத்தில் இதுபற்றிய சிறப்புரிமையை பற்றி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே சபாநாயக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சபாநாயக மேலும் இது பற்றிக்கூறுகையில் தற்போதுள்ள நிலையில் சட்டத்தின் படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமையில் எதுவித வரையறையும் செய்யப்படவில்லை. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமாயின் இலங்கைக் கட்டளைச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

### விசாரணை

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்படுவதற்கு முன்னர் கொலைஞர்கள் எனக் கருதப்படுவோர் உணவு அருந்திய உணவுச்சாலையின் ஊழியர் நேற்றுக் கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் தமது சாட்சியத்தை வழங்கினார். இதன் ...து கொலைஞர்கள் எனக் ...படுவோர் நடந்துக்கொண்ட குறித்து விளக்கமளித்துள்ளார்.(32)


ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 27-06-1974 வீரச்சாவு 24-11-1999

கடற்புலி

லெப்.கேணல் ஜோன்சன்/இளங்கதிர் (துவசி இந்திரதேவன்)

சம்பூர், திருமலை

(சம்பவம் தமிழீழ கடற்பரப்பில்–இலங்கை கடற்படையினருடனான மோதலில்)

ஓசையுறு கடலில் வந்த<br>ஒன்னவர் படையைச்சாடி<br>மாசறுதல் வீரச்சாவில்<br>மறைந்தவன் ஜோன்சன் வாழி.

தேசமது கலங்கக்கண்டு<br>சினத்துடன் எழுந்த வீரன்<br>வீசுகின்ற புயலாய் மோதி<br>வெம்பகை முடிக்க நின்றான்.

குடும்பத்தினர். (5298)

12ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளில்.

பிறப்பு 28 10 1972



வீரச்சாவு 24 11 1992

வீரவேங்கை கவியரசி/வனிதா

பாலகிருஷ்ணன் கமலசுலோஜினி

சம்பவம்: பலாலி கிழக்கெல்லை 150 காவலரண் தகர்ப்பின்போது

தியாக வேள்வியில் ஆகுதியான வீரவேங்கையே!<br>எங்கள் காவிய நாயகியே கவியரசியே!<br>பன்னிரண்டாம் ஆண்டு நினைவுநாளில் நீங்கா<br>நினைவுடன் உன்னை நினைந்து நிற்கும்!

நி.மு. 4ஆம் கண்டம்,பன்குளம், திருமலை<br>த.மு. 317 நாதன் திட்டம், விசுவமடு. (சி-10772)

தகவல்: குடும்பத்தினர்

# இந்திய அரசின் பொருளாதார திட்டத்திற்கு உலக வங்கி பாராட்டு

(புதுடில்லி)

**ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்ச பொதுச் செயற்றிட்டத்தையும் கம்யூனிஸ்ட்டுக்களின் அகன்ற பார்வையையும் உலக வங்கித்தலைவர் ஜேம்ஸ் உல்பென்சன் பாராட்டியுள்ளார்.**

லண்டனில்.பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில் இந்தியப் பயணத்தின் போது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையும் சந்தித்தேன். அப்போது "ஏழைகளுக்குச் சேவையாற்றுவதில் பரந்த மனப்பான்மை கொண்ட திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இந்தியாவின் உட் கட்டமைப்புக்கு உலக வங்கி நிதியுதவி தரவேண்டும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர். சமூகம் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பில் கம்யூனிஸ்டுக்கள் கொண்டுள்ள அகன்ற பார்வை பாராட்டுக்குரியது. அவர்கள் கம்யூனிஸ்ட்டுக்காரார்கள் போலவே இல்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்த பட்ச பொதுச் செயற்றிட்டம் அருமையாக உள்ளது. உலக வங்கியின் குறிக்கோளுக்கு ஏற்றபடி உள்ளது.

இந்தியாவின் ஸ்திரத்தன்மையும் வளர்ச்சியும் ஏற்பட வேண்டும் என்றால் கிராமப் புறங்களில் வசிக்கும் 70கோடி மக்கள் மேம்படவேண்டும். இந்தியாவின் கொள்கை நடவடிக்கைகளும் நன்றாக உள்ளன. அவற்றை அமுற்படுத்துவதில் அரசுக்குக் கடுமையான சோதனை அடங்கி இருக்கிறது. இந்தியாவின் கொள்கைகளை உலக வங்கி தீர்மானிப்பதாகக் கூறப்படுவது தவறு. கோஷ்ராரிக்கா போன்றோ அல்லது மடகஸ்கார் போன்றோ இந்தியா இல்லை. வோஷிங்டனில் தயாரிக்கப்பட்ட திட்டத்தை அமுற்படுத்தும்படி கூறும் பொலிஸ்காரன் நிலையிலிருந்து உலக வங்கி மாறிவிட்டது இந்தியா எங்களின் வடிக்கையாளர் நாங்கள் இனி பொலிஸ்காரன் போல் செயற்படமாட்டோம். காங்கிரஸ் தலைமையிலான அரசு நாட்டின் கட்டமைப்புத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்றும் நம்புகின்றோம்.

# இந்தியாவுடன் நடக்கும் பேச்சில் மிகப்பெரிய முன்னேற்றம் இருக்காது

## பாகிஸ்தான் பிரதமர் கருத்து

(கொழும்பு)

காஷ்மீர் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து நான் இந்தியாவுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் மிகப்பெரிய குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாது என கொழும்பிற்கு விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதமர் ஷாகத் அஜீஸ் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டும். காஷ்மீருக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் அல்லது பாகிஸ்தான்-இந்தியா கூட்டு அதிகாரத்துடன் ஐ.நா.மேற்பார்வையில் அங்கு நிர்வாகம் நடக்க வேண்டும் இதற்கு இந்தியா வளைந்து கொடுக்க வேண்டும். நாங்கள் எங்கள் நிலையை மாற்றி மாற்றிப் பேசுவதில்லை.ஒரு நாட்டிற்குச் சென்றால் ஒரு பேச்சு மற்றொரு நாட்டிக்குப் போனால் மற்றொரு பேச்சு என்பது எங்களிடம் கிடையாது. அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்களை நாங்கள் வாங்குவதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்திருக்கிறது இதற்கும் காஷ்மீர் பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தம் இல்லை. ஒவ்வொரு நாடும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஆயுதங்களைச் சேகரித்துக்கொள்ள உரிமை உண்டு. காஷ்மீருக்கு நிரந்தத் தீர்வு ஏற்படும் நாள் வெகு தூரத்தில் தான் இருக்கிறது. மிக விரைவில் தீர்வு ஏற்பட சாத்தியம் இல்லை. என்றா லும் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம். பாகிஸ்தான் எல்லை மற்றும் காஷ்மீரில் இருந்து இந்திய இராணுவம் வாபஸ் பெறுவதை வரவேற்கின்றோம். தொடர்ந்து வாபஸ் பெறும் நடவடிக்கை நடைபெறவேண்டும். ஒரு இடத்தில் இருந்து மட்டும் வாபஸ் பெற்றால் போதாது இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் மேலும்கூறினார்.இலங்கை சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் பிரதமர் ஷாகத்அஜீஸ் நேற்று முன்தினம் மாலைதீவு ஊடாக டில்லி சென்றார். டில்லி சென்றதும் பாகிஸ்தான் பிரதமரை இந்திய மத்திய வெளியுறவுத்துறை மந்திரி நட்வர்சிங் சந்தித்துப் பேசுகிறார்.

வருகிற வியாழக்கிழமை காலையில் எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியைப் பாகிஸ்தான் பிரதமா சந்தித்துப் பேசுவார். பின்னர் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை சந்திப்பார். பகல் 12.30 மணிக்கு பாகிஸ்தான் பிரதமரும், இந்தியப் பிரதமரும் சந்தித்துப் பேசுகின்றார்கள். காஷ்மீர் பிரச்சினை மற்றும் சிறீநகர் முஷாபர்பாத் இடையே பேருந்து விடும்திட்டம்பற்றி பேசுவார் பிற் பகல் 3.00 மணிக்கு சனாதிபதி அப்துல் கலாமை பாகிஸ்தான் பிரதமர் சந்திப்பார். பிற்பகல் 4.00 மணிக்கு மத்திய தொழில் மந்திரி கமல்நாத் பாகிஸ்தான்பிரதமரைச்சந்திப்பார்.




# சங்கராச்சாரியார் கைது குறித்து பா.ஜனதாக்கட்சி கண்டனம்

(சென்னை)

தமிழ்நாடு பா.ஜ.க. சார்பில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கைதுக்குக் கண்டனம் தெரிவித்து சென்னை மயிலை மாங்கொல்லையில் நேற்றுமுன்தினம் மாலை பொதுக்கூட்டம் நடந்தது. இதில் கலந்துகொண்டு அகில இந்திய பா.ஜ.தலைவர் எல்.கே.அத்வானி பேசினார்.

ஜெயேந்திரர் கைது நடந்ததும் அரசிடம் உறுதியான ஆதாரம் இருப்பதாகப் பத்திரிகைகள் எல்லாம் கருதி எழுதின. கொலையாளிகளுக்குக் கொடுத்த பணம் குறிப்பிட்ட வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது. ஒலிப்பதிவு நாடா இருக்கிறது என்றெல்லாம் செய்திகள் வந்தன. இதைப் பார்த்து நாங்கள் எல்லாம் திகைத்துப்போனோம். ஜெயேந்திரர் கைது என்பது தனிநபர் பிரச்சினையல்ல. ஒரு மகத்தனா ஸ்தாபனத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும்.

நாம் யார் என்ற தலைப்பில் அமெரிக்கர் எழுதிய புத்தகத்தை சமீபத்தில் படித்தேன். அப்போது நாம் யார்? நமது தேசிய அடையாளம் என்ன? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. எனக்கு 77 வயதாகிறது. முதல் 20 ஆண்டுகள் அந்நியர் ஆட்சியில் இந்தியா இருந்தபோது வாழ்ந்தேன். அந்த வெள்ளையர் காலத்தில் கூட இப்படிப்பட்ட அவமதிப்பு நடத்தப்பட்டதில்லை. அந்த அளவுக்குக் கேவலமாக சங்கராச்சாரியர் நடத்தப்பட்டுள்ளார்.

2 சம்பவங்கள் என்னால் மறக்கமுடியாது. ஒன்று 1975 ஜுன் 25ஆம் திகதி நடந்தது. மற்றொன்று 2004இல் இப்போது நடந்தது. முதல் சம்பவத்தில் நானும், வாஜ்பாயும் பெங்களூரில் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பங்கேற்க எம்.எல்.ஏ. விடுதியில் தங்கியிருந்தபோது நடந்தது. மறுநாள் காலை பொலிசார் வந்து இந்த நாட்டின் பாதுகாப்புக்கு நீங்கள் எதிரிகள் என்று கூறி கைது செய்து சென்றனர் அந்தக் கைதுச் செய்தி எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை. அதற்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால் மக்களின்அறிவைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. 1977இல் என்ன நடந்தது? மக்கள் தங்கள் கோபத்தை சிவபெருமான் 3ஆவது கண்ணைக் காட்டியதுபோல தேர்தலில் காட்டித் தோற்கடித்தனர். எனவே மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என நினைக்க வேண்டாம். சரியான நேரத்தில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றார் அத்வானி.


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 11 1949

உதிர்வு 17 11 1994

### அமரர் சிவகுரு நவரத்தினம்

திதி:24.11.2004

(உரிமையாளர் கனகா பத்திரிகை விற்பனை அகம், திருநெல்வேலி)

நீங்கள் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆனாலும் தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்கா உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துன்புறும் மனைவி,
மக்கள், உற்றார், உறவினர்கள்.

நிரந்தர முகவரி:-
கனகஇல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

தற்காலிக முகவரி:-
இல:37,
பலாலிவீதி,
திருநெல்வேலி.

(சி-10780)



## டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை கிளிநொச்சி.

### பணிநிலை வேண்டுகை

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களால் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை "பணிப்பாளர்", டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு 30.11.2004 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

**01. மருந்தாளர் பயிலுநர்**

வயதெல்லை:- 18-26 இருபாலரும்
தகைமை :- க.பொ.த(சா/த)இல் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02. எக்ஸ்றே [கதிர்] இயந்திர இயக்குநர்**

வயதெல்லை :- 18-35 (ஆண்கள்)
தகைமை :- க.பொ.த.(சா/த)இல் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு :- ★சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
★எக்ஸ்றே இயந்திர இயக்குநர் முன்னனுபவம் உள்ளவராயின் முன்னுரிமை வழங்கப்படும்.

பணிப்பாளர்,
டாக்டர்பொன்னம்பலம் ஞா.ம.ம,
கிளிநொச்சி.

(சி-10635)

# மீண்டும் வருகிறார் சக்லைன் முஸ்டாக்



பாகிஸ்தான் சுழல் பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்டாக் மீண்டும் போட்டிகளில் பங்கேற்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாகவும் வயிற்றில் ஏற்பட்ட அல்சர் வருத்தம் காரணமாகவும் அவர் போட்டிகளில் பங்கேற்காது இருந்தார். அவர் தற்போதுதான் குணமடைந்திருப்பதாகவும் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் மீண்டும் போட்டிகளில் பங்கேற்கவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் இந்தியாவுடன் டெஸ்ட் போட்டியில் பங்கேற்ற இவர் 204 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

முஸ்டாக் அதன் பின்னர் இங்கிலாந்து சரோகவுண்டி அணிக்காக விளையாடும் போது காலில் காயமேற்பட்டு ஓய்வில் இருந்தார்.

# சர்ச்சைக்குரிய தூஸ்ரா பந்து வீச்சு இலகுவானதும் விரும்பத்தக்கதும்



**ஈசான்மணி**

சர்வதேச கிரிக்கெட்சபை பந்து வீச்சாளர்களுக்கு தற்போது அனுமதித்துள்ள தூஸ்ரா பந்து வீச்சு முறை இலகுவானதும், விரும்பத்தக்கதுமாகும் என சபைத் தலைவர் ஈசான்மணி தெரிவித்துள்ளார்.

இந்தப் பந்து வீச்சு முறை பெரும் சார்ச்சையைக் கிளப்பியிருந்தது. 15 பாகை மணிக்கட்டு வளைவதை அனுமதித்ததற்குக் காரணம் அதற்குக் குறைவான பாகை மனித கண்களுக்கு புலனாகாது என ஆய்வாளர்கள் தெரிவித்தமையே எனக் கூறிய அவர், இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், தவறு செய்யும் ஒருவரை இனம் கண்டு அந்நாட்டு நிர்வாகம், அரம்பத்திலேயே திருத்த முயற்சிக்க வேண்டும். அதன் பின்னர் திருப்தி என்றால் அனுமதிக்கலாம் என்றும். எனினும் அவர் தொடர்பாக அறிக்கைகள் கிடைக்கும்போது பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவார் என்று தெரிவித்துள்ளார். எனினும் 15 பாகைக்கு மேல் ஒருவர் கைகளை வளைப்பாராயின் அதனை அனுமதிக்க முடியாது என்றும் மணி தெரிவித்துள்ளார்.

இரண்டு முறை குற்றம் சுமத்தப்பட்ட முரளி பற்றிக் கேட்டபோது அவர் அவரது பந்துவீச்சு வேகப்பந்து வீச்சுக்களை விட வேகமானது. முன்னைய விதிமுறை எவ்வித விஞ்ஞான அறிக்கையின் படியும் எடுக்கவில்லை என்றார். சில மந்த வேகப் பந்து வீச்சாளர்களின் செயல் வேகப்பந்து வீச்சாளர்களையும் சுழற்பந்து வீச்சாளர்களையும் போன்றதாகவே இருப்பதால் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றார்.

# ஆஷஸ் தொடரில் பங்கேற்பதில் ஆவலாய் உள்ளேன்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டெரன் லீமன் தான் உடனடியாகப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அடுத்தவருடம் இங்கிலாந்துடனான ஆஷஸ் கிண்ணத் தொடரில் அவர் இணைக் கப்படுவார் என நம்புவதாகவும், நிச்சயம் அந்தப் போட்டித்தொடர் முழுவதிலும் தாம் பங்கேற்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னைய போட்டிகளில் திறமையை வெளிக்காட்டியிருப்பினும் கடந்த 12 மாத காலமாக அவரின் திறமையில் வீழ்ச்சி ஏற்பட்டது.அவரின் பிறந்த இடமான அடிலேடில் நடைபெறும் ஆஷஸ் தொடரின் 2 ஆவது டெஸ்டில் அவர் பங்கெடுப்பார் எனவும் அது அவரின் இறுதிப் போட்டியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலிய அணியில் இருந்து எந்த ஒரு வீரரையும் விலக்குவது என்பது பெரும் சிரமமான காரியமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆக்ரோசமான ஆட்டம் எமது திட்டத்தை சிதறடித்தது



**ரேஜென்னிங்ஸ்**

ஆக்ரோசமான ஆட்டத்தால் எங்களது அணுகுமுறையை இந்திய வீரர்கள் நிலைகுலையச் செய்துவிட்டனர் என தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் ரேஜென்னிங்ஸ் 3ஆம் நாள் ஆட்ட முடிவில் நிருபர்களிடம் கருத்துத்தெரிவித்தார்.

"நாங்கள் நிர்ப்பந்தம் அளிப்போம் என எண்ணியிருந்த நேரத்தில், அற்புதமான துடுப்பாட்டத்தால் அவர்கள் எங்களுக்கு நிர்ப்பந்தம் அளித்து வருகின்றனர். அவர்களது அதிரடி ஆட்டத்தால் எங்களது பந்து வீச்சாளர்கள் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர் என்றார்.காம்பீர், ஷேவாக் சவாலை முறியடிக்கும் விதமாக ஆடுவதால் எமது வீரர்களால் பந்தை நேர்த்தியாக வீச முடியவில்லை. ஓரிரவில் அதை முறியடிப்பதற்கான உத்தியைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளோம் எனக் கூறினார் ஜென்னிங்ஸ்.

# அவுஸ். அணியில் மாற்றமில்லை

அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்ட் நகரில் 26 ஆம் திகதி நடக்கவுள்ளது இந்தப் போட்டிக்கான அவுஸ்திரேலியஅணி அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்ட் போட்டிக்கான அணியில் இருந்து எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 156 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி கண்டது. அறிவிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அணி விபரம் வருமாறு:- ரிக்கிபொண்டிங் (தலைவர்), லாங்கர், ஹெய்டன், மார்ட்டின், லீமன், கிளார்க், கில்கிறிஸ்ட், வோர்ன் , கிலெஸ்பீ, காஸ்ப ரோவிட்ச்,மெக்ராத், பிரெட்லீ,

# ரசிகர்களிடையே மோதல் கத்தியால் குத்தி இளைஞன் பலி

இஸ்தான்புல்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கால்பந்தாட்டத்தின்போது ஒரே அணி ரசிகர்களிடையே ஏற்பட்ட மோதலில் 16 வயது இளைஞர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டார்.

ரிசஸ்பார், பெசிக்டாஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி இஸ்தான்புல்லில் நடைபெற்றது. ஆட்டத்தின் பாதி நேரத்தில் ரிசஸ்பார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

அப்போது பெசிக்டாஸ் ரசிகர்களிடையே மோதல் ஏற்பட்டு, சிகாஸ் அக்டாஸ் எனும் இளைஞர் கத்தியால் குத்தப்பட்டார். படுகாயமடைந்த அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு உயிரிழந்தார் அவர்.இதற்கிடையே அரங்கில் அமைக்கப்பட்டிருந்த கமராவின் உதவியால் குற்றவாளியைக் கைது செய்யும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டனர். இதனால் ஆட்டம் முடிந்ததும் தடுப்பு அமைத்து ஒவ்வொருவராக வெளியே விடப்பட்டனர். ஆட்டம் 2-2 என்ற கணக்கில் சமநிலை முடிந்தது.

# உப்புச்சப்பற்ற முடிவை நோக்கி கான்பூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கான்பூரில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டி பெரும்பாலும்



வெற்றி தோல்வியற்ற முடிவைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா பெற்ற 510 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடும் இந்தியா நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 4 விக்கெட்டுக்களை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் ஷேவாக் அதிரடியாக ஆடி 164 ஓட்டங்களைப் பெற்றார். சிறப்பாக ஆடி வந்த காம்பீர் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் தனது முதலாவது சதம் பெறும் வாய்ப்பையும் இழந்தார். இவர்களைவிட சச்சின் மூன்று ஓட்டங்களுடனும், கங்குலி 57 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது



ராவிட் 52 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் அன்ரூ ஹோல் இரண்டு விக்கெட்டுகளையும், போலக், பிரைன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் ஐந்தாம் நாளும், இறுதிநாளுமாகும்.

# சாம்சங் டெஸ்ட் தரவரிசை அனில்கும்ளே முதலிடத்தில்



சாம்சங் டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசைப் பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளார் இந்திய சுழல் நாயகன் அனில்கும்ளே.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் விக்கெட்டுக்களை அள்ளிய இவர் இப்போதைய தென்ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டிலும் ஆதிக்கத்தை நிலை நாட்டி வருகிறார். நேற்று முன்தினம் வெளியான சாம்சங் பந்து வீச்சாளர்களுக்கான டெஸ்ட் தர வரிசைப் பட்டியலில் கும்ளே 199 புள்ளிகளுடன் இங்கிலாந்தின் ஸ்டீவ் ஹார்மிசனை முந்தி முதல் இடத்தைப் பெற்றார். ஹார்மிசன் 190 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு பின் தங்கினார். உலக சாதனையாளரான அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் 151 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

துடுப்பாட்டத்தில் லாரா, இலங்கையின் ஜெயசூரிய, சங்கக்கார ஆகியோர் முறையே முதல் மூன்று இடத்தில் உள்ளனர்.




## கிப்ஸ் பங்கேற்கமாட்டார்

இந்தியப் பயணம் எதிலும் கிப்ஸ் பங்கேற்கமாட்டார் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்தபோது அணித்தலைவர் குரோனே, கிப்ஸ், போயே மற்றும் ஸ்டைர்டோம் ஆகிய 4 வீரர்கள் மீது சூதாட்டக்குற்றச்சாட்டு எழுந்தது.

# மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டி கடற்புயல், வித்தியா அணி பலப்பரீட்சை


தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட முல்லை மாவட்டத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையேயான மென்பந்துப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கடந்த 19ஆம் திகதி விசுவமடு தோழர்கள் அணியை முள்ளியவளை வித்தியா அணியும், புதுக்குடியிருப்பு சுப்பர்ராங் அணியை முல்லைத்தீவு கடற்புயல்கள் அணியும் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்கு முள்ளியவளை வித்தியா அணியும் முல்லைத்தீவு கடற்புயல் அணியும் தெரிவாகியுள்ளன.இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டு மைதானத்தில் நடைபெறயுள்ளது. (20)

## மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 30.11 2004 எனவும் மத்தியஸ்தர் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென கிளிநொச்சி மாவட்ட விளையாட்டதிகாரி ச.கனகராசா தெரிவித்துள்ளார். (சோ)

# தமிழீழ விளையாட்டுத்துறையால் திருமலையில் கரப்பந்தாட்டப்போட்டி

மாவீரர் நாளையொட்டி திருகோணமலைக் கடற்கரையில்நேற்று கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பமானது. இச் சுற்றுப்போட்டியில் 16 விளையாட்டு அணிகள் பங்கு பற்றுகின்றன. இரு சிறுபான்மையின அணிகளைத் தவிர ஏனைய 14 அணிகளும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவை. இவற்றுள் கடற்படை, பொலிஸ் அணிகளும் அடங்குகின்றன. இவ் விளையாட்டுப் போட்டிகளை தமிழீழ விளையாட்டுத்துறை திருமலை மாவட்டப் பிரிவு நடத்துகின்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருமலை மக்ஹெய்சர் ஸ்ரேடியத்தில் ஆரம்பமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இம்மாதம் 26 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடத்தப்படும்.(21)



## சிந்தனைக்கு

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடு கொடுத்து தனது விடுதலைப்பயணத்தில் வெற்றி நடை போடமுடிந்ததென்றால், அதற்கான அடிப்படைக்காரணம் எமது இலட்சிய உறுதி தான் என்பதை நான் திட்ட வட்டமாகக் கூறுவேன்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## நீதித்துறைக்குச் சவால்!

"அதியுயர் அதிகாரம் கொண்ட நீதிபதியொருவர் படுகொலை செய்யப்படும் அளவிற்கு நாட்டில் நீதித்துறை பெருமளவு சீரகுலைந்துள்ளது." என பிரதம நீதியரசர் எச்சரிக்கும் அளவிற்கு சிறிலங்கா நீதித்துறை பெரும் சவாலை/ அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய பாதள உலகக் கோஷ்டியினரால் அவரது வீட்டில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டமையானது நீதித்துறை பாதுகாப்பற்ற தொன்றாகிவிட்டது என்பதை கேள்விக்கிடமற்ற வகையில் வெளிப்படுத்தும் சம்பவமாகும். பாதாள உலகக்கோஷ்டியினர். இத்தகைய நடவடிக்கைக்குத் தயாராகியமை என்பது - இத்துறை அன்றி இத்துறையைச் சார்ந்தவர்களிடம் இருந்து தமக்கு ஏற்படக்கூடிய எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத் தயார் என்பதன் அடிப்படையிலேயே ஆகும்.

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இத்தகைய துணிச்சல் ஏற்பட்டுள்ளமைக்கு தனித்துவமாக அவர்களிடம் உள்ள ஆயுதபலம், பணபலம், வலைப்பின்னல் தொடர்பு என்பன மட்டும் தான் காரணம் என்பதல்ல. அவர்களுக்கு அரசியல் ரீதியில் உள்ள செல்வாக்கு-அரசியல்வாதிகள் அவர்களை ஓரம் தள்ளி விட்டு அரசியல் நடத்த முடியாதநிலை என்பதுவும் காரணமாகும்.

தென்னிலங்கையில் இயங்கிவரும் பாதாள உலகக் கோஷ்டியினர் அன்றி இதுவரையில் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியினர் அனைவருமே ஏதோ ஒருவகையில் அரசியல் வாதிகளுடன் தொடர்புபட்டவர்களாகவே இருந்துள்ளனர். இதில் பெரும்பான்மையோர் அரசியல்வாதிகளின் மெய்ப்பாதுகாவலர்களாகப் பணி புரிந்தவர்கள் அன்றி அரசியல்வாதிகள் வளர்த்தெடுத்த குண்டர்களாக இருந்துள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் அரசியல்வாதிகளுக்கு ஒருபுறத்தில் வேண்டப்பட்டவர்களாகவும் மறுபுறத்தில் அரசியல்வாதிகளின் பலம், பலவீனம் அவர்களின் கடந்தகால அந்தரங்கங்களைத் தெரிந்தவர்களாகவும், தொடர்புபட்டவர்களாகவும் இருந்துள்ளனர். இந்நிலையில் இவர்களை அணைக்கவும் முடியாது துரத்தவும் முடியாத நிலையில் அவர்களின் விருப்பிற்கான நடவடிக்கைக்கு அனுமதிப்பதைத் தவிர வேறுவழி அற்றவர்களாகவே அதிகாரத்தில் உள்ளவர்கள் இருக்கின்றனர்.

இதேவேளை நீதிச்சேவையும் முழு அளவில் நீதியுடன் செயற்படுவதாக இல்லை. சிறிலங்கா நீதிச்சேவை இப்பிராந்தியத்தில் உள்ள ஊழல், மோசடி மிக்க மிகமோசமான துறைகளில் ஒன்று என ஆய்வொன்று கூறுகின்றது. அதாவது ஊழல், மோசடி, அதிகாரத் துஷப்பிரயோகம் என்பன மலிந்து காணப்படும் ஒன்றாகவே இது உள்ளது.

இவ்வாறாக நீதிச்சேவையின் கௌரவம் பாதிக்கப்படும் அளவிற்கு நிலை உருவாகியமைக்கு இனப்பிரச்சினை தொடர்பாக நீதிச்சேவையின் செயற்பாடும் முக்கியமானகாரணமாகும். அதாவது ஒருபுறத்தில் நீதித்துறை நீதிக்கு மாறானவகையில் தீர்ப்புக்களையும் இழுத்தடிப்புக்களையும் மேற்கொண்டது எனின், மறுபுறத்தில் நீதித்துறை பணத்திற்காகவும், பதவிக்காகவும் சோரம் போனதாகவும் இருந்தது.

வேறொரு விதத்தில் நீதிச்சேவையானது அதிகாரத்தில் உள்ளவர்களின் கைப்பாவையாகச் செயற்பட்டது. அதாவது ஆளும் கட்சி எதுவாகினும் நீதிச்சேவையைத் தமக்குச் சாதக மாகப் பயன்படுத்திக்கொண்டன. பலவேளைகளில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை ஆளும்தரப்பு வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் ஒரு களமாக நீதித்துறை மாற்றம் பெற்றிருந்தது.

இத்தகையதொரு நிலையில் நீதிச்சேவையில் உள்ளவர்களும் அவற்றைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டனர் எனலாம். இதன் காரணமாக நீதித்துறையைச் சார்ந்தவர்கள் தமது நன்நடத்தை, ஒழுக்கம், நேர்மை என்பன பற்றியதான கவலை எதையும் கொள்ள வேண்டியதாக இருக்கவில்லை.

இதுமட்டுமல்ல நீதித்துறைக்கும் குற்றவாளிகளுக்கும் இடையிலான தொடர்பாளர்களாக இருக்கவேண்டிய பொலிஸ் துறையும் நீதித்துறை போன்றே ஊழல் மோசடிகளில் திளைத்ததாக இருந்தது. குற்றவாளிகளுக்கும், பொலீஸ் துறைக்கும் இடையிலான உறவு மிக நெருக்கமானது. பல வேளைகளில் பெரும் குற்றச் செயல்களுக்குப் பொலிசாரே நேரடியாகத் தொடர்புபட்டவர்காளக இருந்துள்ளனர்.

இந்தவகையில் நீதித்துறை-பொலிஸ்துறை-அரசியல்வாதிகள் என்பனவற்றின் ஒட்டுமொத்த நடவடிக்கையே இன்று நீதித்துறையை மட்டுமல்ல, நாட்டையே சீர்குலைத்து நிற்பதற்குக் காரணமாகும். இதன் வெளிப்பாடே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அவரது வீட்டிலேயே சுட்டுக்கொல்லப்படக் காரணமாகியது.

ஆனால் வேறொரு வகையில் பார்க்கையில் நீதிபதி சரத் அம்பேபிட்டிய சுட்டுக்கொல்லப்பட்டமையானது சிறிலங்கா நீதித் துறையில் இருந்த முரண்பாடான ஒருவர் வெளியேற்றப்பட்டுள்ளார் என்று கூடக் கூறலாம். அதற்காக சரத் அம்பேபிட்டியாவின் தீர்ப்புக்கள் யாவும் நியாயபூர்வமானவை என்றோ, அவர் அரசியல் செல்வாக்கிற்கு உட்படாதவர் என்றோ கூறிவிட முடியாது. ஆயினும், இவர் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு எதிராகப் பல கடுமையான தீர்ப்புக்களை வழங்கியவராவார். இதனால், இவரை அப்புறப்படுத்த வேண்டியது சிறிலங்கா அரசியல் வாதிகள், பொலிசார் உட்படப் பலருக்கு அவசியமாக இருந்திருக்கக்கூடும். இந்நிலையில் கூட்டான ஒரு சதியின் மூலம் இவர் அப்புறப்படுத்தப்பட்டிருக்கலாம்.

இத்தகைய நிலையில் அதாவது " வேலியே பயிரை மேய்வது" போன்ற சூழ்நிலை காணப்படும் நிலையில் நீதித்துறை சீர்குலைவைச்சந்திப்பது என்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும் அதிகாரத்தைக் கொண்டவர்கள் நீதிக்கு மாறாகச் செயற்படுபவர்களாக இருக்கையில் நீதித்துறையும் அவ்வழியில் செல்வது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

## தமிழீழ மாவீரர் எழுச்சி நாள்-2004

தேச்மெங்கும் சோதியாய் நிற்பவரே
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரியின் பாசறையை
வெடி குண்டு கொண்டு தகர்த்தும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
உயிரினை உடலினை உரமிட்டு ஈந்து
செங்குருதியால் வரலாறு படைத்து
தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச்சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய வேதங்களாய்
ஈழ மண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவார்.

ஏன் இவர்கள் மாவீரர்கள்
தமிழ் இன விடிவிற்காய் மரணித்தவர்கள்
தேசம் தூங்கிய போது விழித்திருந்தவர்கள்
உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறை
போட்டவர்கள்.
தேச மக்களின் பாசப் பிணைப்புக்காக
தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள்.
பள்ளிப் பாரயத்தை பள்ளித் தோழருக்காய்
பறிகொடுத்தவர்கள்
ஊரெல்லாம் உறங்கும் வேளை
உறக்கமின்றி விழித்தவர்கள்
எல்லை சுற்றி வெளிச்சிலையாய் நின்றவர்கள்
தமது மக்களுக்காய் கால்களை,
கரங்களை இழந்து நின்றவர்கள்.

தமிழீழ மாவீரர் பணிமனை

## அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வரிஅறவீட்டில் வடகிழக்கிற்கு மட்டும் சலுகை கூடாது

-ஹெல உறுமய பா.உ. தெரிவிப்பு

வடக்கு கிழக்கில் மாத்திரம் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வரி அறிவிடுவதில்லை என்ற அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட யோசனையை ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த ஆட்சேபித்துள்ளார். இவ்வாறான செயற்பாடு ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இது ஒரு பக்க செல்வாக்கைச் செலுத்தும் திட்டமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் சிறந்த திட்டங்களைக் கொண்டிருப்பதாகக் கூறிய அவர், அதற்கு தாம் ஆதரவளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். அம்பாறையில் பௌத்த இடம் ஒன்று விவசாய நடவடிக்கைகள் நிமித்தம் கொள்ளையிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எல்லாவெல குறிப்பிட்டார். (32)

## மாகாண சபையில் தமிழ்மொழிக்கு இடமில்லை மாகாணசபை உறுப்பினர் வெளிநடப்பு

தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்பதை ஆட்சேபித்து மேல் மாகாண மககள் முன்னணியின் உறுப்பினர் பிரபா கணேசன் மாகாண சபையில் நடவடிக்கைகளில் இருந்து வெளிநடப்புச் செய்தார். மேல் மாகாண சபையில் தமிழ் பேசும் உறுப்பினர்களின் வசதிகருதி மொழிபெயர்ப்புக் கருவிகள் பொருத்தப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய அவர், தமது தாய் மொழிக்கு மதிப்புத்தராத சபையில் பொழுது போக்கத் தயாரில்லை எனத்தெரிவித்தார். தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வைக்காணும் வகையிலேயே மாகாண சபைத் திட்டம் கொண்டு வரப்பட்டது ஆனால் இன்று இனப்பிரச்சி னைக்கு உட்பட்டுள்ள வடக்கு கிழக்கிலே அந்த மாகாண சபை செயலிழந்து காணப்படுகிறது. இந்த நிலையில் மேல் மாகாண சபையில் வரவு செலவுத்திட்ட உரையின்போது தமிழ்மொழி பெயர்ப்பு இடம் பெற்றது. எனினும் பின்னர் அது கைவிடப் பட்டதாக பிரபா கணேசன் குற்றம் சுமத்தினார். இதற்கு எதிராக சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக தமது கட்சி முடிவெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (32)

## அரசியலமைப்பை மாற்றியமைக்க சனாதிபதி ஐ.தே.க. பா.உ.களை வசப்படுத்த முயற்சி

-பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

சனாதிபதியின் ஒரே நோக்கம் அரசியலமைப்பை மாற்றியமைப்பதுவும் அதற்காக ஐககிய தேசியக கட்சியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை தம்வசப்படுத்துவதுமாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். எனவே அதற்கு மத்தியில் அரசாங்கத்துடன் எதிர்கட்சித் தலைவர் இணங்கிச்செல்வது இயலாத விடயம் என அவர் குறிபபிட்டுள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆடசிக்காலத்தில் உள் துறை அமைச்சராக இருந்த ஜோன் அமரதுங்க குற்றங்களைத் தடுப்பதற்காக மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்ய வேண்டும் என்ற தனிநபர் பிரேரணையைக் கொண்டு வர முயற்சித்தபோதும் அதற்கு சனாதிபதி ஆதரவு வழங்கிவில்லை என்றும், அவர் ஆதரவு வழங்கியிருந்தால் இன்று எவ்வளவோ குற்றங்கள் குறைந்திருக்கும்.

அரசாங்கம் உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் உயர்வதன் காரணமாக நாட்டில் எரிபொருடகளின் விலைகளை உயர்த்துவதாகத் தெரிவித்து வருகிறது. அப்படியானால் இன்று உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. எனில் அரசாங்கம் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில அந்த நாடு இன்று எரிபொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது எனத் தெரிவித்த அவர், இந்த நிலையில் அரசாங்கம் உலக சந்தையின் விலையுயர்வுக்கு ஏற்ப எரிபொருட்களின் விலையை உயர்த்தவில்லை என்பது தெளிவாகியுள்ளது.என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு கருத்துரைத்த ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை மையமாகக்கொண்டு வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கவில்லை எனக்கூறுகின்ற அதே நேரம் நிதியமைச்சின். செயலர் பி.பி ஜெயசுந்தர வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்திக்க அரசாங்கம் 900 மில்லியன் ரூபாய்களை எதிர் பார்ப்பதாக நேற்றுத் தெரிவித்தமை அரசாங்கத்தின் பொய்யான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார். அரசாங்க ஊழியர்களுக்கு 9 மணி நேர பணி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி காட்டிய எதிர்ப்புக் காரணமாகவே அதனை அரசாங்கம் விலக்கிக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (32)

-மேல் நீதிமன்ற நீதிபதி கொலை-

## தகவல் வழங்குவோருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலையுடன் தொடர்பாகத் தகவல் வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்படுமென சிறிலங்கா பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. இதே வேளை படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கிடைத்த தகவல்களுக்கமைய உருவப்படங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த உருவப்படங்களுக்கு சமமான எவரேனும் தொடர்பான தகவல்கள் இருப்பின் தெரிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் கேட்டுள்ளது.

# கிளியில் சிறப்புற நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள



மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் நேற்றுக்கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக நேற்றுப் பகல் 11.15 மணியளவில் கிளிநொச்சி சந்திரன் பூங்காவின் முன்றலில் இருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் ஊர்வலமாக மத்திய கல்லூரிக்கு அழைத்துவரப் பெற்று அங்கு நிகழ்வுகள் ஆரம்பமானது.பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் பிரிவு அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித்தள பதிகளில் ஒருவரான கோபித் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் பொது திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றி வைக்க மலர்மாலையினை திருமதி பொன் தியாகம் அணிவித்தார். செல்வி கஸ்மீனாவின் மாவீரர் நடனத்தினை அடுத்து தலைமையுரையினை கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் நிகழ்த்தினார். நினைவுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் வடமுனைகட்டளைத்தளபதிகளில் ஒருவரான லெப்கேணல். வீரமணி ஆகியோர் நிகழ்த்தினார், மாவீரர் நினைவாக கவிதையினை சாள்ஸ் அன்ரனி படையணிப்போராளி ஜெயசீலன் வழங்கினார். தொடர்ந்து இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவிகள், குருகுலம் மாணவிகளின் மாவீரர் நடனங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து மாவீரர்களின் ஞாபகார்த்தமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னம் பிள்ளைகள் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



## தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில் மாவீரர் லோரன்ஸ் சிறுவர் பூங்கா திறப்பு

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவீரர் லோரன்ஸ் ஞாபகார்த்த சிறுவர் பூங்கா எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். (20)

## இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்து கருத்துக்கூற பாக்.பிரதமர் மறுப்பு

இலங்கை இந்திய நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படத் தீர்மானித்த பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து கருத்துக்கூற பாகிஸ்தானிய பிரதமர் மறுப்புத் தெரிவித்துள்ளார். எது நல்லது எது கெட்டது என்பதனை ஒப்பந்தம் கைச்சாத்திட உள்ள நாடுகளே தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர் பாகிஸ்தான் இலங்கை நாடுகளிடையே இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு மிகச்சிறப்பாகவே உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.சிக்கல் ஏற்பட்ட போதெல்லாம் இரண்டு நாடுகளும்பரஸ்பரம் நன்கு உதவிகொண்டுள்ளதாக குறிப்பிட்ட பாகிஸ்தானியப் பிரதமர் யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்ற பாரிய தாக்குதல் நடத்தியபோது இலங்கை இராணுவத்திற்கு இராணுவத்தளபாடங்களை வழங்கிய நாடுகளில் பாகிஸ்த்தானும் ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

## கருணா குழுவின் பெயரில் இராணுவம் துண்டுப்பிரசுரம் விநியோகம்

மட்டக்களப்பு நகரில் தேச விரோதக் கும்பலின் பெயரிலான துண்டுப் பிரசுரமொன்றை இராணுவத்தினர் நேற்று அதிகாலை நகரின் பல பகுதிகளிலும் விநியோகித்துள்ளதாக இணையத்தளமொன்று தெரிவிக் கிறது.

தமிழ்ப்பகுதியெங்கிலும் மாவீரர் வார நிகழ்வுகள்உணர்வு பூர்வமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வரும் இவ்வேளை, அந்நிகழ்வுகளில் மக்களைப் பங்கேற்க வேண்டாம் என்று கோருவதான மேற்படி பிரசு ரங்களை கருணா குழு என்ற பெயரில் இராணுவத்தினரே விநியோகித்தனர்.

## மூவர் நியமனம்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நிலைக்கு மூவரை நியமிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் அரசியலமைப்பு சபை கூடியது. சபாநாயகர் தலைமையில் கூடிய அரசியலமைப்பு சபையில் உறுப்பினர்களான எதிர் கட்சித் தலைவர் மற்றும் பிரதம மந்திரி ஆகியோரும் ப்ங்கேற்றனர்.

இதேவேளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர்களான பி.எதிரிசூரிய , அமிர் இஸ்மாயில் மற்றும் முன்னாள் காவல்துறை மா அதிபர் டி இ ஆனந்தராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (32)

### போர்தான்...

தேசத்தில் இராணுவ வன்முறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இராணுவ அரண்கள் அமைக்கப்படுவதும், இராணுவ வேலிகள் விஸ்தரிக்கப்படுவதும், கண்ணிவெடிகள் புதைக்கப்படுவதும், இராணுவங்கள் குவிக கப்படுவதும் இந்த மக்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த நிலை உடன் நிறுத்தப்பட வேண்டும். இந்த நிலை தொடருமானால், போருக்கான சூழல் ஒன்று உருவாகும். சமாதானம் குலையும்.

இப்போரினால் எமக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருகின்ற ஒரு சூழல்கூட ஏற்படலாம். ஏனென்றால், அதற்காக நாங்கள் உங்களை வாழ்த்த விரும்புகின்றோம். காரணம் ஜெயசிக்குறு நடவடிக்கையின் ஊடாக சமாதானத்துக்கான போர் என்ற போர்வையிலே எங்கள் மீது போர் திணிக்கப்பட்டது. அந்தப் போரின் விளைவு என்ன? எங்களுடைய பாதுகாப்புப் படையான தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பல்லாயிரம் கோடி பெறுமதியான ஆயுத தளபாடங்களைக் கொண்டுவந்து கொடுத்தீர்களே. அது எங்களுக்குப் பலத்தைத் தந்தது. இன்று உங்களோடு இராணுவ பலத்தில் சமனாக நாங்கள் நிற்கின்றோம். இந்த நிலையில் ஒரு பக்கத்திற்கு உங்களுடைய பாதுகாப்பு நிதி என்பது அதிகரிப்பது எங்களுக்கு வாய்ப்பாகக் கருதுகின்றோம். இதன் ஊடாக எங்களுக்கான இறுதித் தீர்வை அம்மையார் பெற்றுத்தருகின்ற வாய்ப்புக் கிட்டும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். வடக்கு-கிழக்கில் எத்தனை தொழிற்சாலைகள் இருந்தன. இவற்றைப் புனரமைப்புச் செய்து செயற்படுத்தி துறைசார் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது பற்றி ஏனிந்த வரவு-செலவுத் திட்டத்தில் சிந்திக்கப்படவில்லை. காங்கேசன்துறைச் சீமெந்து ஆலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பு உற்பத்திக் கூட்டுத்தாபனம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இவை அனைத்தும் செயற்பட முடியாத நிலையில் சில தொழிற்சாலைகள் இராணுவத்தினுடைய முகாம்களாக உள்ள நிலையிலும், வாழைச்சேனை காகிதாதித் தொழிற்சாலையோ, கந்தளாய் சீனித் தொழிற்சாலையோ பழைய நிலையிலேயே இருக்கின்ற ஒரு நிலை இன்றும் காணப்படுகின்றது. இந்தத் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதைப் பற்றி எந்த ஒரு திட்டமும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. தமிழர் பிரதேசம் என்பதால் நாங்கள் புறக்கணிக்கப்படுகின்றோம் என்பது தெட்டத் தெளிவாக இதில் தெரிகின்றது. வடக்கு-கிழக்கு நிலப்பரப்பில் எழுபது வீதி நிலப் பரப்பு இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் பிரதேசத்தில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் அதற்கான இயந்திர சாதனங்களைக் கொண்டு வருவதற்கும் இன்று தடை விதிக்கின்ற நிலை எம்மண்ணில் காணப்படுகின்றது.

எனவே, கடந்த முப்பது ஆண்டு காலமாகத் தயாரிக்கப்பட்ட அரசின் வரவு-செலவுத் திட்டங்கள் எல்லாம் எந்தவொரு அபிவிருத்தியையும் எங்களுடைய மண்ணில் செய்யவில்லை. சொத்துக்கள் அழிவுகளையும், நில அபகரிப்புக்களையுமே செய்து வந்திருக்கிறார்கள். எங்களுடைய இனம் கடந்த முப்பது ஆண்டு காலத்திற்கு பின்னோக்கித் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலேதான் நாங்கள் எங்களுடைய வடக்கு-கிழக்கு மாகாணத்தினுடைய இணைந்த சுயாட்சியைக்இடைக்கால தன்னாட்சி அரசைக் கேட்டு நிற்கின்றோம்.

இந்த தன்னாட்சி அரசு என்பது எங்களுக்கு பேச்சுவார்த்தை இழுத்தடிப்பினால் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே, இந்த அரசுக்குத் தெளிவாக ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றோம். இந்த அரசு இடைக்கால தன்னாட்சி அரசுக்கான எங்களுடைய வரைபுத்திட்டத்தைப் பரிசீலனை செய்து பேச்சுவார்த்தை நடத்தத் தவறினால் அதன் காரணமாக இந்த மண்ணிலே ஒரு யுத்தம் வெடிக்குமானால் இந்த யுத்தம் ஏற்கனவே, ஜெயசிக்குறு நடத்தி சமாதானத்தை எங்களுக்குப் பெற்றுத் தந்தது போல இந்த அரசுக்கு எங்களுடைய இறுதித் தீர்வைப் பெறுவதற்கு இந்த அரசு எங்களுக்கு வழி செய்து தந்ததாகவே நாங்கள் கதைக்கின்றோம். எனவே, பேச்சுவார்த்தை மூலம் எங்களுடைய உரிமைகளை நாங்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம். அவ்வாறான பேச்சுவார்த்தை இல்லை போர்தான் இறுதித்தீர்விற்கு வழி செய்யும் என்றால் அதற்கும் எங்களுடைய மக்கள் தயாராக இருக்கின்றார்கள். எங்களுடைய இறுதிப் பிரசவமாக அந்த வேதனையை எங்களுடைய மக்கள் அனுபவித்தாலும் எங்களுடைய எதிர்காலச் சந்ததிக்காக தமிழீழம் அந்த வேதனையின் மத்தியிலே மலரும். அந்த தமிழீழத்தினுடைய கொடி ஐக்கிய நாடுகள் சபையிலும் பறக்கும் என்பதைக் கூறி வைக்க விரும்கிறேன் என்றார். (சோ,கு)

### ஐ.தே.க....

அமுனுகம, நிச்சயமாக அது சட்டமயப் படுத்தப்படமாட்டாது எனத்தெரிவித்தார். இந்த நிலையில் மஹிந்த சமரசிங்கவின் கேள்வி அர்த்தமற்றதுஎன ராஜித சேனாரட்ண தெரிவித்ததை அடுத்தே இருவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது கருத்துரைத்து ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குள்அமைதிவலயம் அமைக்கப்படவேண்டும் எனக்கேட்டுக் கொண்டனர். (32)

### அமைச்சரின்...

தகடுகள் வேறொரு வாகனத்திற்குரியதெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்த ஜேசுதாசன் ஜெயராஜ் மற்றவர் மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த சற்குணம் கிருசாந்தன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கைது செய்யப்படும் போது இரண்டு மைக்ரோரக கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### சூறாவளி...

குறித்து புத்தளம் பிரதேச செயலாளர் சத்ரத்னபண்டார கருத்துத் தெரிவிக்கையில் இது குறித்து மக்கள் பெருமளவு பயம் கொள்ளத்தேவையில்லை எனவும், காலநிலை அவதான நிலையம் சூறாவளி குறித்து சரியாகக்கணிப்பிட்டுக் கூறவில்லை என்பதால் மக்கள் வதந்திகளைக் கேட்டு இடம் பெயரவேண்டாம் எனக் கோரியுள்ளார். அவ்வாறு சூறாவளி அபாயம் ஏற்பட்டால் அது குறித்து மக்களுக்கு உரியமுறையில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (32)

### மாவீரர்...

கான அனுமதியை வழங்கி விட்டுச் சென்ற பின்னும் படையினர் அவ்விடத்தை விட்டு விலகாது கவசவாகனங்களுடனும், துருப்பு காவிகளுடனும் வீதியில் நின்று அச்சுறுத்தல் செய்தவண்ணம் நின்றனர். (தீ)

### தமிழீழ...

களின் பிரதேசத்தில் மாவீரர் நினைவுநாள் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் முல்லைப் பிரதேச மக்களும், கடற்புலிகளும் இணைந்து மாவீரர் நினைவாலயத்தை அமைத்து வருகின்றனர். சகல அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னால் பாதைகள், வளைவுகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்து மாவீரர்நாள் நிகழ்வு வெகுசிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

### டெனிஸ்...

கான சம்பளஉயர்வு, நியமனத்தின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு வழங்கப்பட்டிருக்கவில்லையெனக் கூறப்படுகின்றது. இச்சம்பள உயர்வை உறுதியளித்தபடி வழங்கக்கோரி குறித்த பணியாளர்கள் வேலைத்தளங்களிற்குச் செல்லாது நேற்றுமுன்தினம் முதல் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் பகிஷ்கரிப்பினில் ஈடுபட்டிருந்த பணியாளர்களில் எண்மரை ஒழுங்கீனத்தைக் காரணம் காட்டி வேலையில் இருந்து நீக்குவதாக நிர்வாகம் அப்போது அறிவித்திருந்தது. இதனால் கோபமுற்ற பணியாளர்கள்ஒட்டு மொத்தமாக வேலைத்தளங்களுக்குச் செலலாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் தமக்கான உரிய தீர்வை வழங்கக்கோரி ஆட்சேபனையையும் எழுப்பியிருந்தனர்.

எனினும் பதிலெதனையும் வழங்க மறுத்த உயர் அதிகாரிகள் அங்கிருந்து வாகனங்களில் வெளியேற முற்பட்ட வேளையில் ரதான வாயில்களைப்பூட்டியதுடன், அவர்களை அங்கிருந்து வெளியேற பணியாளர்கள் அனுமதி மறுத்துவிட்டனர். அத்துடன் அறைகளினுள் அவ்வதிகாரிகளை வைத்துப்பூட்டினர். பொலிசார் வந்தும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியவில்லை. 6 மணிநேர சேவை இடைநிறுத்தத்தின்பின் வேலைநீக்க உத்தரவு வாபஸ் பெறப்பட்டது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.